# அஞ்சாத இளவரசன்


## (பக்த பிரகலாதன்)

### The Fearless Prince

(கோகுல் பஜன் குழந்தைகளும் பெற்றோர்களும் வரைந்த படங்களுடன்)



ஆசிரியர்
யுக ஆச்சார்யர் நித்ய லீல ப்ரவிஷ்ட ஓம்
விஷ்ணு பாத அஷ்டோத்தர
ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜ்



நித்ய லீல ப்ரவிஷ்ட ஓம் விஷ்ணு பாத அஷ்டோத்தர
ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜ்

# அஞ்சாத இளவரசன்

## (ஸ்ரீ பக்த பிரகலாதனின் சரித்திரம்)

## (Fearless Prince)

ஸ்ரீமத் பாகவதம் ஏழாம் காண்டத்தைத்   தழுவியது

இரண்டாம் பதிப்பு
Version: 2.3 (January 21, 2023)

ஆசிரியர்
ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த  நாராயண  கோஸ்வாமி மகாராஜாவின் சொற்பொழிவுகளிலிருந்து தொகுக்கப்பட்டவை.

Author:
**Yuga Acharya Srila Narayana Goswami Maharaja**

**Publication:** Gokul Publications
Gokul Bhavan, 2/5 Mission Compound
Kottaram - 629703, Kanyakumari,
Tamil Nadu, South India

**Translation:** Bhagavati Kanti Dasa

**Funding by:** Nava Kishori Devi Dasi (NC, USA)
Madan Mohini Devi Dasi (NC, USA)

**Corrections:** Radhika Devi Dasi
Krishna Priya Dasi

Printing: Ajay Krishna Dasa

**Contact:** bkdasa@gmail.com
gokulbhajan.com
youtube.com/c/bkdasa
+91 959 796 9492
+91 750 222 2794
+91 960 066 8797

**Paintings:**
Ankita Mishra
Chitra & Subramanian
Kamala Devi Dasi
Megha Marni
Priya Dasi
Sushma Dasi
Anupama Devi Dasi
Divya Venkat
Manjula Devi Dasi
Priti Bhatia
Sakshi Bhatia

© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense |
gvp.contactus@gmail.com

# பொருளடக்கம்

1. பகவானின் மகிமை......................................................10
2. பிரகலாதனின் அரக்கத் தந்தை..................................12
3. என்னைப் போல் படிக்க வை.......................................13
4. பிரகலாதனின் பிரகாசிக்கும் பக்தி..............................14
5. ஹிரண்ய கசிப்புவின் ஆவேசம்..................................15
7. பிரகலாதனைக் கொல்லவே முடியவில்லை...............19
8. மகா சக்கரவர்த்தியின் கவலை....................................23
9. திரும்பவும் பள்ளிக்கு.....................................................24
10. இப்போதே ஆரம்பியுங்கள்.........................................25
11. உலக வாழ்க்கை நிலையற்றது...................................28
12. கிருஷ்ண பக்தியே பேரானந்தம்................................30
13. மனித ஜென்மம் விலை மதிக்க முடியாதது................32
14. பிரகலாதன் அரக்கக் குழந்தைகளைச் சேர்த்தான்....35
15. நரசிம்ம பகவானின் அற்புதமான தோற்றம்.............38
16. பிரகலாதன் மேல் பகவானின் அன்பு........................41
17. பிரகலாதன்: "அனைவருக்கும் மோட்சம் கொடுங்கள்!"..........................................................................44
18. அசைக்க முடியாத நம்பிக்கையே உண்மையான பலம்.............................................................................46

# முன்னுரை

இந்தியாவில் தோன்றிய வேதங்களே இவ்வுலகத்தின் ஆதி முதலான சாஸ்திரங்களாகும். பூலோக மற்றும் ஆன்மீக ஞானங்கள், உலகம் படைக்கப்பட்ட காலத்திலிருந்தே வழி வழியாக வந்து, பின், கடைசியில் 5,000 வருடங்களுக்கு முன்னால், நூல் வடிவத்தில் ஸ்ரீ வியாஸ முனிவரால் எழுதப்பட்டன. இறைவனின் ஒரு அவதாரமான வேத வியாஸர் எழுதிய சாஸ்திரங்கள் அனைத்தும் மிகவும் ஆழ்ந்த ஞானங்களை கொடுப்பவை. அவைகளில் ஒன்று தான் எல்லாவற்றிலும் சிகரமாக விளங்கும் ஸ்ரீமத் பாகவதம் ஆகும். அது அனைத்து உண்மைகளிலும் மேலான பரம உண்மைகளைப் பற்றிப் போதிக்கிறது. மனித வாழ்க்கையின் ஒரே குறிக்கோள், பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பக்தி சேவை புரிந்து பிறப்பு இறப்புகளிலிருந்து விடுபட்டு அந்த பரம இறைவனின் பாதங்களை அடைந்து, அவருடன் பேரானந்தமாக இருப்பது மட்டுமே என்று போதிக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணரே பரம இறைவனென்றும் அவரிடமிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன என்றும் அது கூறுகிறது. மேலும், அவர் பலவிதமான அவதாரங்களாக இந்தப் பூவுலகில் தோன்றி, தன் பக்தர்களை மகிழ்வித்தும், அவர்களுடன் பற்பல லீலைகள் புரிந்தும் பரஸ்பரம் அன்பைப் பரிமாறவும் செய்கிறார். ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது காண்டம், பகவான் அவ்வாறு 5,000 வருடங்களுக்கு முன்னால் தோன்றி நிகழ்த்திய லீலைகளைப் பற்றி அழகாக விளக்குகிறது.

ஆனால் அதற்கும் வெகுகாலங்களுக்கு முன்னால் பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன், பகவான் இவ்வுலகில் நிகழ்த்திய லீலைகளைப் பற்றியும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளன. அவைகளில் ஒன்று தான் அவர் அரை மனித வடிவமும் அரை சிங்க வடிவமுமான நரசிம்ம பகவனாகத் தோன்றி பக்தப் பிரகலாதனைக் காத்த சரித்திரம். பிரகலாதன் அரக்கக் குலத்தில் பிறந்த ஒரு பாலகன். அவனுடைய தந்தை ஹிரண்யகசிப்பு மற்றும் ஹிரண்ய கசிப்புவின் சகோதரனான ஹிரண்யாக்ஷன் அனைவரும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு (விஷ்ணுகளுக்கு) எதிரியாக இருந்தனர். ஆனால் பிரகலாதனோ ஸ்ரீ கிருஷ்ணரின் சுத்தமான பக்தன். சிறு வயதிலிருந்தே பிரகலாதன் அனைத்து நற்குணங்களையும் பெற்றிருந்தான்.



அவனது தந்தை ஹிரண்ய கசிப்புவும் ஹிரண்ய கசிப்புவுடன் பிறந்த ஹிரண்யாக்ஷனும் மிகவும் கொடூரமான அரக்கர்கள். தங்களது கடும் வலிமையாலும் திறத்தாலும் எல்லா உலகங்களையும் தங்கள் கீழ் கொண்டு வந்தனர். ஹிரண்யாக்ஷன் தன் பெரிய கதாயுதத்தைத் தோளின் மேல் போட்டுக் கொண்டு எல்லா உலகங்களுக்கும் சென்று கொடுமைகள் செய்து அனைவரையும் போரில் கொன்றான். தேவலோகத்தில் வசித்த தேவர்களும் கூட அவனுக்கு அஞ்சி ஓடினர். கடைசியில் பகவான் விஷ்ணுவிடமே நேராகப் போர் புரியவும் ஆயத்தமானான். நடந்த போரில் ஹிரண்யாக்ஷன் பகவான் விஷ்ணுவால் கொல்லப் பட்டான்.



தன் சகோதரன் இறந்த செய்தியைக் கேட்ட ஹிரண்யகசிப்பு மிகவும் கோபம் கொண்டான். எப்படியாவது விஷ்ணுவைக் கொல்லுவதாகச் சபதம் எடுத்தான். எங்கெல்லாம் விஷ்ணுவுக்கு யாகங்களும் வழிபாடுகளும் நடத்தப் பட்டதோ அவையெல்லாவற்றையும் அழித்தான். புரோகிதர்களையும் விஷ்ணு பக்தர்களையும் இரக்கமின்றிக் கொன்றான்.

யாகங்களுக்கும் மற்றும் ஆன்மீக வழிபாடுகளுக்கும் வேண்டிய நெய், பால் போன்றவை பசுக்களிடமிருந்து வருவதால் எல்லாப் பசுக்களையும் கொன்றான். கோயில்களை எல்லாம் தீயால் எரித்தான். இவ்வாறு உலகத்தையே அழிக்க ஆரம்பித்தான்.

அதுமட்டுமின்றி, விஷ்ணுவை வெல்ல சக்தியும் சாகா வரமும் பெற வேண்டி நம் பூலோகக் கணக்கின் படி சுமார் 20,000 வருடங்கள் மிகக் கடுமையான தவம் இருந்தான். அவனது கடும் தவம் மேலுலகங்களையும் கீழ் உலகங்களையும் உலுக்கின. இதனால் தேவர்கள் அனைவரும் பிரம்ம தேவரிடம் சென்று முறையிட்டனர். பிரம்ம தேவர் ஹிரண்ய கசிப்புவின் முன்னால் தோன்றினார். கடும் தவத்தால் ஹிரண்ய கசிப்புவின் உடல் முழுவதும் எறும்பால் அரிக்கப்பட்டு வெறும் எறும்புப் புற்றாகவே இருந்தான். பிரம்ம தேவர் தன் கமண்டலத்திலிருந்து சிறிது நீரை அவன் மேல் தெளித்தார். புது உடல் பெற்று ஹிரண்ய கசிப்பு வெளியே வந்து பிரம்ம தேவரிடம் வேண்டிய வரங்களைப் பெற்றான். கிடைத்த வரத்தால் மூவுலகங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டான். மகாபெரும் முனிவர்களும் தேவர்களும் அவனுக்கு அடங்கி பயந்து வாழ்ந்தனர். அது மட்டுமல்லாமல் அவர்கள் அடிக்கடி ஹிரண்யகசிப்புவிடம் வந்து வணக்கங்களைத் தெரிவித்து விட்டும் சென்று கொண்டிருந்தனர்.

வேதங்களைக் கடைப்பிடிப்பவர்கள், பசுக்கள், பிராமணர்கள், முனிவர்கள், பக்தர்கள் அனைவர்களையும் ஹிரண்ய கசிப்பு மிகவும் கொடுமைப் படுத்தினான். அவனுடைய பெரும் சக்தியினால் கர்ம பலனைக் கூட மாற்றியமைத்தான். அதன்படி நல்லோர்களை நரகத்திற்கும் பொல்லாதவர்களை சுவர்க்க லோகத்திற்கும் அனுப்பினான். எல்லாமே தலை கீழாக நடந்தன. மூவுலகங்களிலும் ஆண்டு வந்த அரசர்கள் கூட அவனுக்குப் பயந்து நடுங்கினர். ஆனால் ஒரே ஒரு பாலகன் மட்டும் எந்த விதமான பயமும் இன்றி தன் பரிசுத்தமான பக்தியை பகவானிடம் பரிமாறியவாறு அமைதியாக வாழ்ந்து வந்தான். அவன் தான் பக்த பிரகலாதன்!

அளவில்லாத சக்தி வாய்ந்த ஹிரண்ய கசிப்பு, விஷ்ணு பகவானிடம் பகைமை வைத்திருந்ததால் அவன் அமைதியற்று வாழ்ந்தான். அவனால் மூன்று உலகங்களையும் தன் சுண்டு விரலால் ஆட்ட முடிந்தது. ஆனால், தன் சிறு பச்சிளம் பாலகனை அவனால் கட்டுப் படுத்த இயலவில்லை. இதனால் அவன் தன் கோபத்தை அந்தக் குழந்தையிடம் காட்டி, முடிவில் பரிதாபமாக அழிந்தான். இனி மீதியுள்ள அற்புதமான கதையை எங்கள் குரு

மகாராஜாவான ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜாவின் சொற் பொழிவுத் தொகுப்புக்களிலிருந்து படித்து மகிழுங்கள்.

இந்த நூல் "The Fearless Prince (The story of Prahlad Maharaj)" என்ற ஆங்கில நூலிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இந்த பதிப்பை குரு தேவரின் பிறந்த நாளில் வெளியிடுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஜனவரி 21, 2023
குரு தேவர் பிறந்த தினம்

பகவதி காந்த தாஸா
சியாமலி தேவி தாஸா



# 1. பகவானின் மகிமை

எல்லாம் வல்ல பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அவரது சொல்ல வொண்ணாத அழகாலும் இனிமையினாலும் அனைத்து ஜீவ ராசிகளையும் கவர்ந்து இழுக்கிறார். அவரை விதம் விதமான, மற்றும் மிக உயர்ந்த நிலையிலுள்ள பக்தர்களும் வழிபடுகின்றனர். அவர்களது பக்தி நிலையை, எவ்வாறு அவர்கள் பகவானுக்கு பக்தித் தொண்டு செய்கிறார்கள் என்பதையும், பகவானிடம் அவர்கள் எவ்வளவு தூரம் நெருங்கி உறவாடுகிறார்கள் என்பதையும் பார்த்து அறியலாம். ஒரு ஆரம்ப நிலை பக்தன், பகவானை ஐஸ்வரியமும் ஆடம்பரமும் கொண்ட நிலையில் வைத்து வழிபடுவான். அவனது எல்லா வழிபாட்டிலும் ஐஸ்வர்ய பாவம் தான் முன்னே நிற்கும். அவ்வாறான பக்தனுக்கு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் யார் என்பதும், ஜீவாத்மாவின் இயற்கை என்னவென்பதும், மாயை என்றால் என்ன, உயர்ந்த நிலையான பக்தி என்பது என்ன, சுத்தமான கிருஷ்ண பக்தியின் வெவ்வேறு நிலைகள் என்ன, பகவானுக்கும் பக்தனுக்கும் இடையில் பரிமாறப்படும் அமிர்தமான அன்புப் பரிமாற்றங்கள் என்ன என்று அனைத்தும் தெரியும்.

அவ்வாறு பகவானை ஐஸ்வரியமும் பெரும் மகிமையும் கொண்டவராகக் கருதி வழிபட்ட சிறந்த பக்தர்களில் ஒருவரே ஸ்ரீ பிரகலாத மகாராஜா. ஸ்ரீ கிருஷ்ணரிடம் பரிசுத்தமான அன்பு கொண்ட பக்தர்களுக்கெல்லாம் அவர் அரசன் போன்று தலை சிறந்து விளங்கியதால் அவருக்கு மகாராஜா என்ற மதிப்பான பட்டம்! இன்று நாம் அந்த பிரகலாத மகாராஜாவின் இதயத்தில் அவருக்கு ஸ்ரீ கிருஷ்ணரிடம் எப்படிப்பட்ட தன்னலமற்ற பரிசுத்தமான பக்தி இருந்தது என்பதையும் அவர் எப்படி எல்லா பக்தர்களை விடவும் மேலான பக்தராக இருந்தார் என்பதையும் விவரமாகக் காண்போம்.

நீ பகவானின் சிறந்த பக்தனாக ஆக வேண்டுமானால், பிரகலாத மகாராஜாவைப் பின்பற்றி அவரது தன்னடக்கம், பரிசுத்தம், சகிப்புத் தன்மை இவை அனைத்தையும் பெற வேண்டும். அதற்கு முதன் முதலாக, நம் சொந்த ஆசைகளையும், இந்திரிய சுகங்களை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசைகளையும் விட்டு விட்டு, பதிலாக பக்தியை வளர்க்க வேண்டிய செயல்களில் ஈடுபட வேண்டும். மற்றும், வெறும் வரட்டு வேதாந்த ஞானங்களிலும், உலக, மற்றும் பொருள் சம்பந்தமான இன்பங்களிலும், தேவையற்ற விரதங்கள் மற்றும் அஷ்டாங்க யோகா, பலிகள், நோன்புகள், சமயச் சடங்கு விதிகள் இவை எவற்றிலும்

ஈடுபடாமல், பரிசுத்தமான பக்தி சாதகங்களில் ஈடுபட வேண்டும். உன் உடல், மனம் வாக்கு அனைத்தையும் முழுக்கவும் ஸ்ரீ கிருஷ்ணருக்காக மட்டுமே உபயோகப் படுத்தி தன்னலமற்ற பக்தி சேவையில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு நீ உன் அனைத்து இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி, கனிந்த இதயமுடன், அனைத்தையும் பகவானுக்கு மட்டுமே உபயோகப் படுத்தி, அவருக்கும் அவரது பக்தர்களுக்கும் சேவை செய்து வாழும் போது மட்டுமே அது பரி சுத்தமான பக்தி என்று அழைக்கப் படுகிறது. மாறாக நம் சுயநலங்களை என்ணி பகவானுக்கு எவ்வளவு சேவைகள் நாம் செய்தாலும் அது உண்மையில் சுத்த பக்தி அல்ல. சுத்தமான பக்திக்கு சுய நலம் எதுவும் இல்லாததால், அதற்கு பகவானையே இழுக்கும் சக்தி உண்டு!

# 2. பிரகலாதனின் அரக்கத் தந்தை

பிரகலாத மகாராஜா சாதாரணமானவரல்ல. மிகவும் அடக்கமும் சகிப்புத் தன்மையும் கொண்டவர். ஆனால் தந்தை ஹிரண்ய கசிப்புவோ ஒரு கொடுமையான அரக்கன். ஆனால் அவன் வேத நூல்கள் அனைத்தையும் மிகச் சிறப்பாகக் கற்ற ஒரு பெரிய நிபுணன். எல்லா வேதங்களும் அவனது நாக்கின் நுனியில் இருந்தது மட்டுமின்றி, அவன் சமஸ்கிருதம், அதன் இலக்கணம் அனைத்திலும் கூட மிகவும் புலமை பெற்றிருந்தான். ஆனால் அவனது சுபாவமோ அரக்கத்தனம் கொண்டது. ஸ்ரீ கிருஷ்ணருக்கு எதிராகவும் அவரிடம் பகை கொண்டும் இருந்தான்.

கடவுளுக்கு எதிராக எவனொருவன் விளங்கினாலும் அவன் ஒரு அரக்கனே. முந்தைய வேத காலங்களிலெல்லாம் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் வெறும் இரண்டு மூன்று அரக்கர்கள் மட்டுமே இருந்தனர். இராவணன், ஹிரண்ய கசிப்பு என்பவர்கள். ஆனால் இப்போதோ எங்கிலும், எந்த தேசத்திலும் அரக்கர்களே மிகுந்து காணப்படுகிறார்கள். எந்தக் காரணமுமின்றி அவர்கள் இந்த உலகத்தையே அழிக்க விரும்புகிறார்கள். நாம் அவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். எப்படி? எப்போதும் பகவானின் புனிதமான நாமங்களை ஜெபித்தும் சுத்த பக்தர்களிடம் சேர்ந்தும் அவர்களின் உதவியினால் நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டும்.

ஹிரண்ய கசிப்பு பிரம்ம தேவரிடமிருந்து வலிமை வாய்ந்த வரத்தைப் பெற்றிருந்தான். இந்த அண்ட சராசரங்களைப் படைத்த பிரம்மரிடம் எப்படிப் பட்ட வரங்களை அவன் பெற்றிருந்தான்? "நான் ஆகாயத்தில் இறக்கக் கூடாது; இதன் கீழ் உலகத்திலோ அல்லது மேல் உலகத்திலோ வைத்து இறக்கக் கூடாது. நான் எந்த விதமான ஆயுதத்தாலும் கொல்லப் படக் கூடாது. நான் ஜீவன்களாலோ, உயிரற்றவைகளாலோ கொல்லப்படக் கூடாது. உம்மால் (பிரம்மாவால்) படைக்கப் பட்ட மனிதர்கள், மிருகங்கள், பாம்புகள், பறவைகள் மற்றும் எந்த விதமான பிராணிகளாலும் கொல்லப் படக் கூடாது. நான் பகலிலோ அல்லது இரவிலோ சாகக் கூடாது. வருடங்களில் வரும் மாதங்களில் சாகக் கூடாது. நான் உள்ளோ வெளிப்புறத்திலோ வைத்து சாகக் கூடாது..." என்று பிரம்ம தேவரிடம் வரத்தைப் பெற்றுக் கொண்டு சாகாவரம் பெற்றவனைப் போல் வாழ்ந்து வந்தான்.


ஹிரண்ய கசிப்புவும் பிரகலாதனும் தந்தையும் மகனுமாக இருந்திருந்தும், அவர்களுக்குள் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசங்கள் இருந்தன. ஹிரண்ய கசிப்பு எப்போதும் பிரகலாதனிடம் சண்டையும் வாக்கு வாதமும் பிடிப்பான். ஆனால் பிரகலாதனோ அடக்கமுடன் எல்லாவற்றையும் சகித்துக் கொள்வான். ஹிரண்ய கசிப்பு ஒரு அரக்கன். ஆனால் பிரகலாதனோ ஒரு சுத்தமான பக்தன். ஒரு தேவன்! ஒரு அரக்கனுக்கு இப்படி ஒரு மிகவும் உயர் தரமான ஒரு பக்தன் மகனாகப் பிறப்ப தென்பது அபூர்வத்திலும் மேலான அபூர்வம். பிரகலாதன் மிகவும் புத்திசாலியாக இருந்தது மட்டுமின்றி, தனது மற்ற எல்லாக் குழந்தைகளிலும் இளையவனாகவும் இருந்ததால் ஹிரண்ய கசிப்பு பிரகலாதனிடம் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்தான். மற்ற எல்லா அரக்கக் குழந்தைகள் படித்து வந்த சுக்கிராச்சாரியாரின் குருகுலப் பள்ளியில் பிரகலாதனைச் சேர்த்தான்.

# 3. என்னைப் போல் படிக்க வை

அப்போது சுக்கிராச்சாரியார் வேறொரு விஷயமாக தூர தேசம் சென்றிருந்தார். எனவே அவரது மகன்களான சந்தா, அமர்க்கா என்ற இருவரும் அந்தப் பள்ளியில் குருக்களாக இருந்தனர். சந்தா என்றால் காளை என்று அர்த்தம். காளை மாடு மிகவும் பயங்கரமானது, பெண் மாடுகளிடம் மோகம் கொள்வது. சில சமயங்களில் அது மதம் பிடித்து ஓடும். அர்க்கா என்றால்

வெளிச்சம் என்று பொருள். ஆனால் அமர்க்கா என்றால் வெளிச்சத்துக்கு எதிரான இருளைக் குறிக்கும். இந்த இரண்டு பேரும் வெளிச்சத்தில் இல்லை. அதாவது சுய ஆத்ம ஞானம் இன்னமும் வரவில்லை. எவரொருவர் காளை போன்றோ, அல்லது எப்போதும் அறியாமை என்ற இருளில் மூழ்கியிருக்கிறார்களோ, அவர்கள் இந்த சந்தா, அமர்க்காவைப் போல் இறை ஞானமோ பக்தியோ இன்றித்தான் இருப்பார்கள்.

ஹிரண்ய கசிப்பு அவர்களுக்குக் கட்டளை இட்டான்: "எனது மகனுக்கு நீங்கள் இருவரும் சமயச் சடங்குகள், பொருளாதாரம், உலக இன்பங்களை நுகரும் ஞானங்கள், மற்றும் முக்தி பெறும் வழிகள் போன்றவற்றைப் பற்றி மட்டும் போதியுங்கள். முக்கியமாக, அரசியலில் நிறைய கற்பிக்க வேண்டும். எவ்வாறு பகைவர்களை வெல்லுவது என்பதையும், எவ்வாறு மற்ற தேசங்களை ஆக்கிரமிப்பது என்பதையும், எவ்வாறு அரசாங்கத் தந்திரத்தாலும் நிர்வாகத் திறமையாலும் உண்மையை மறைக்கலாம் என்ற அனைத்து ஞானங்களையும் கற்பிக்க வேண்டும்". இவ்வாறு ஹிரண்ய கசிப்பு அந்த ஆசிரியர்களுக்கு உத்தரவிட்டான்.
சுமார் நான்கு அல்லது ஐந்து மாதங்கள் பள்ளியில் பயின்று விட்டு பிரகலாதன் ஒரு சமயம் வீட்டுக்கு வந்திருந்தான். அவனது தாயார் கயாது பிரகலாதனை மிகவும் அழகாக அலங்கரித்து தந்தையிடம் கூட்டிக் கொண்டு வந்தாள். தன் மகனைக் கண்ட ஹிரண்ய கசிப்பு அடக்கமான பிரகலாதனைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு முத்தமிட்டுக் கொஞ்ச ஆரம்பித்தான். "என் அருமை மகனே! நீ மிகவும் புத்திசாலியானவன். உன்




மேல் எனக்கு மிகவும் பிரியம். நீ பள்ளியில் என்னவெல்லாம் படித்தாய்? நீ இதுவரை படித்ததில் மிகவும் சிறந்ததை எனக்குக் கூறு..." என்று ஆவலுடன் ஹிரண்ய கசிப்பு கேட்டான்.

# 4. பிரகலாதனின் பிரகாசிக்கும் பக்தி

அதற்கு உடனே பிரகலாதன் பதிலளித்தான்: என் தந்தையே! "எல்லாவற்றிலும் மிகவும் சிறந்தது, 'சிரவணம் கீர்த்தனம் விஷ்ணோ ஸ்மரணம் பாத சேவனம், அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம்'... "

"அசுர குலத்தின் மகுடமான என் தந்தையே! ஒன்பது விதமான செயல்கள் சுத்தமான பக்தியென்று ஒத்துக் கொள்ளப்பட்டவை. அவைகள்: ஸ்ரீ விஷ்ணு அல்லது ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களையும், அவரது சொரூபம் மற்றும் குணங்கள், லீலைகள் அனைத்தையும் கேட்டும், ஜெபித்தும், பாடியும், அவரை எப்போதும் மனத்தில் தியானித்தும், அவரது பாதங்களுக்கு சேவை செய்தும், அவருக்கு உகந்தவற்றை மரியாதையுடன் அளித்தும், அவருக்கு வந்தனங்கள் செலுத்தியும், அவரது சேவகனாகப் பணிபுரிந்தும், அவரைத் தன் நெருங்கிய நண்பராகக் கொண்டும், தன் உடல், மனம், வாக்கு அனைத்தையும் அவருக்கே அற்பணித்து விடுவதுமாகும். இவ்வாறு எவனொருவன் இந்த ஒன்பது வகையான முறைகளினால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு தன் வாழ்நாட்களையும் ஆத்மாவையும் அர்ப்பணிக்கிறானோ அவன் தான் உண்மையில் எல்லாவற்றையும் கற்றவனாகிறான். ஏனென்றால் அவன் முழு ஞானத்தையும் பெற்றவனாகிறான்."

# 5. ஹிரண்ய கசிப்புவின் ஆவேசம்

தன் மகன் கூறிய பதிலை, சற்றும் எதிர்பார்க்காத ஹிரண்ய கசிப்பு கோபத்தால் தீயைப் போல் வெகுண்டு எழுந்தான். அந்த எதிர்பாராத பதிலைக் கேட்டதால் சத்தமாகக் கடுங்குரலில் சிரித்தான். "பிரகலாதா! நான் உன்னை இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தேன். உன்னை முழுவதுமாகப் பாதுகாத்தும் வளர்த்தும் வருபவன் நான். உன்னிடமுள்ள அனைத்தும் என்னிடமிருந்து வந்தவை. நீ ஏன் உன் தந்தைக்கு மரியாதை கொடுக்காமல், மாறாக என் எதிரியான விஷ்ணுவின் பக்கம் சேர்கிறாய்? இதுவா நீ எனக்குச் செலுத்தும் நன்றிக்கடன்? பிரகலாதா! இப்போது கூறு. யார் உனக்கு விஷ்ணுவைப் பற்றிக் கற்பித்தார்? உனது குருக்களான சந்தாவும் அமர்க்காவுமா உனக்கு இதைக் கற்பித்தார்கள்? "

ஹிரண்ய கசிப்பு பிரகலாதனின் இரு ஆசிரியர்களை நோக்கி சாடினான்: "இதையா நீங்கள் என் மகனுக்குப் போதித்தீர்கள்? நான் உங்களிடம் அவனை உலக விஷயங்களில் எவ்வாறு வெற்றி பெற வேண்டும் என்பதை அல்லவா கற்பிக்கக் கட்டளையிட்டேன்? பின்னர் ஏன் அவனுக்கு ஆன்மீக விஷயங்களையும் விஷ்ணுவுக்கு பக்தி செலுத்துவது பற்றியும் கற்பித்தீர்கள்? நான் உங்களுக்குக் கடுமையான தண்டனையை அளிக்கப் போகிறேன். உங்கள் இருவருடைய தலைகளையும் வெட்டப் போகிறேன்!"

ஹிரண்ய கசிப்புவின் கோபத்தையும் தண்டனையையும் கேட்ட சந்தாவும் அமர்க்காவும் வெடவெட வென்று பயத்தால் ஆட ஆரம்பித்தனர். "ஓ ஐயா! நாங்கள் அப்படி எதையுமே அவனுக்குக் கற்பிக்கவேயில்லை. அவன் இந்த முட்டாள் தனமான விஷயங்களை எங்கிருந்து படித்தான் என்பது எங்களுக்கும் தெரியவே தெரியாது. அவன் தன் சுயமாகத் தான் இதைக் கூறுகிறான். தயவு செய்து அவனிடமே அதை எங்கே படித்தான் என்று கேளுங்கள். நாங்கள் இதை உண்மையிலேயே கற்பித்தோமா என்பதையும் கூட அவனிடமே கேட்டு விடுங்கள். நாங்கள் நிரபராதிகள்" என்று மன்றாடினார்கள்.

பிரகலாதனை ஹிரண்ய கசிப்பு கோபத்துடன் உலுக்கிக் கேட்டான்: "பிரகலாதா! இதை நீ எங்கிருந்து படித்தாய்? உனது குருக்களான சந்தாவோ அமர்க்காவோ இதை உனக்கு சொல்லிக் கொடுக்கவில்லை என்றால் பின் இந்த முட்டாள் தனமானவற்றை இவ்வளவு தூரம் தீர்க்கமுடனும் கம்பீரமுடனும் பேசுமளவுக்கு நீ எங்கே படித்தாய்? பள்ளிக்கு வேறு யாராவது வந்தார்களா? நாரதர் அல்லது அவர் போன்ற பக்தர்கள் எவரும் வந்தார்களா? உண்மையைச் சொல். இல்லாவிட்டால் உன்னை நான் இப்போதே கொன்று போட்டு விடுவேன். நீ என்னை முட்டாள் என்றா நினைக்கிறாய்? உன் குருக்களான சந்தாவையும் அமர்க்காவையும், மற்றும் சுக்கிராச்சார்யாவையும் கூட முட்டாள்கள் என்றா நீ நினைக்கிறாய்? சொல்! இவர்கள் அனைவருக்கும் எதுவுமே தெரியாது என்று தானே நீ நினைக்கிறாய்? "

ஹிரண்ய கசிப்பு உடனடியாக சந்தாவையும் அமர்க்காவையும் கட்டளையிட்டான்: "பிரகலாதனை திரும்பவும் எடுத்துச் செல்லுங்கள். அவனுக்கு அரசியல் மற்றும் ராஜ தந்திரங்களைக் கற்பியுங்கள். எவ்வாறு ஆட்சி செய்வது என்பதையும், எவ்வாறு மற்றவர்களை வெல்லுவது என்பதையும், எவ்வாறு என்னைப்

போல் பலத்தையும் பலாக்கிரமத்தையும் அடைவது என்பதையும் அவனுக்குக் கற்பியுங்கள். அது மட்டுமல்ல. கிருஷ்ணா, விஷ்ணுவின் பக்தர்கள் எவரையும் உள்ளே விடாமல் காவலாளிகளை நிறுத்துங்கள்."

இதைக் கேட்ட சந்தாவும் அமர்க்காவும் பிரகலாதனைத் திரும்பவும் கூட்டிக் கொண்டு தங்கள் குரு குலப் பள்ளியை அடைந்தார்கள். சில மாதங்கள் பயின்ற பின்னர், பிரகலாதன் திரும்பவும் வீட்டுக்கு வந்தான். தாயார் கயாது பிரகலாதனை மிகவும் அழகாக அலங்கரித்து ஹிரண்ய கசிப்புவின் மடியில் கொண்டு இருத்தினாள். தன் மகனைக் கண்டதும் ஹிரண்ய கசிப்பு மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். மேலும் அவன் முன்னர் கேட்டதைப் போல், "மகனே, நீ பள்ளியில் குருவிடமிருந்து என்ன கற்றாய்?" என்று கேட்டான்.

# 6. உயர்ந்த பக்தியில் பிரகலாதன்

பிரகலாதன் உடனே பதிலளித்தான். "ஓ என் அருமை தந்தையே! ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒருவன் தன் சித்தத்தைச் செலுத்தாமல், மாறாக உலக சம்பந்தமான இன்பங்களில் ஆசை கொண்டால், அவன் உண்மையிலேயே தன் ஆத்ம திருப்தியைப் பற்றி எதுவுமே அறியாதவன். கிடைப்பதற்கரிய மனித ஜென்மத்தின் ஒரே குறிக்கோள் ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பக்தி செலுத்துவதே! ஆனால் இந்திரியங்களுக்கு அடிமையாகி, தன் இந்திரிய சுகங்களை மட்டுமே அனுபவிக்கத் துடிப்பவர்கள் இதை அறியவே மாட்டார்கள். முழுவதுமாக அவர்கள் இந்திரிய சுகங்களை அனுபவிப்பதில் ஈடுபட்டு, உண்மையான குறிக்கோளை விட்டுவிட்டு, சுவைத்துத் துப்பிய சக்கைகளைத் தான் திரும்பத் திரும்ப சுவைக்கின்றனர். சுவைத்துத் துப்பிய அந்தச் சக்கைகளில் இன்னமும் ஏதாவது இன்பம் இருக்குமென்று திரும்பவும் சுவைக்கின்றனர்...

"ஆனால் உண்மையில் உலக சுகங்களில் எந்த விதமான இன்பமும் கிடையாது. இருந்தும் அவர்கள் தங்கள் அடக்க முடியாத இந்திரியங்களால் உந்தப்பட்டு, ஜட உலக இன்பத்துக்காக இங்கும் அங்குமாக ஓடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் மாயையின் இருண்ட அறியாமையில் மேன்மேலும் மூழ்குகிறார்கள். கடைசியில் அவை சொல்லவொண்ணாத வேதனைகளில் அவர்களை ஆழ்த்தி விடும்.




"ஸ்ரீ விஷ்ணுவின் தாமரைப் பாதங்களை வழிபடுவதே வாழ்க்கையின் உத்தமமான இலக்காகும். குடும்ப வாழ்க்கையில் மூழ்கி உலக சுகங்களை அனுபவிப்பதை விட்டு விட்டு, விஷ்ணுவை அடைவதற்குப் பதிலாக, அவர்கள் தன் உடல், மனைவி, குழந்தைகள், வீடு, சொந்தக் காரர்கள், வேலை, சமுதாயம் இவையனைத்தும் மகிழ்ச்சியை அளிக்கும் என்று தவறாக எண்ணுகின்றனர்.

"இந்த எண்ணங்கள் கொண்ட குருடர்கள் உலக சம்பந்தத்தில் ஊறிய இன்னொரு குருடனை குருவாகவும் ஏற்று, அவனைப் பின் பற்றுகின்றனர். இவ்வாறு ஒரு குருடன் இன்னொரு குருடனைப் பின்பற்றி, கடைசியில் அனைவரும் பாதாளமான குண்டுக்குள் விழுகின்றனர். ஒரு குரு, வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளை அறியவில்லை என்றால் அவனும் அவனைப் பின்பற்றும் சிஸ்யர்களும் நரகத்துக்கே செல்லுகின்றனர்."

இதைக் கேட்ட ஹிரண்ய கசிப்பு கோபத்தினால் வெகுண்டு எழுந்தான்: "நீ என்னைக் குருடன், அறிவில்லாதவன் என்றா அவமதிக்கிறாய்?" என்று சாடினான். "என் குரு சுக்கிராச்சாரியாரும் அவரது மகன்களான சந்தாவும் அமர்க்காவும் போலியான குருக்கள் என்றா கூறுகிறாய்? அவர்களுக்கு அறிவு எதுவுமில்லை என்றும் உனக்கு மட்டும் தான் அறிவுள்ளது என்றும் தானே கூறுகிறாய்? என் குருவின் மகிமையைப் பற்றி உனக்குத் தெரியவே தெரியாது. அவர் எல்லாவற்றையும் கற்றவர். மிகவும்


சக்தி வாய்ந்தவர். சிறு துளி தண்ணீரைத் தெளித்தே அவர் இறந்தவனைக் கூட உயிர்த்தெழச் செய்து விடுவார். என் குரு, எங்களைத் தவறான பாதையில் கொண்டு செல்வதாகவும், நீ சரியான பாதையை - ஆன்மீக மார்க்கத்தை - எங்களுக்குப் போதிக்கிறாயா?

"நான் 20,000 வருடங்கள் கடுந்தவம் இருந்து பிரம்ம தேவரிடமிருந்து வரம் வாங்கியவன். நான் என் வாழ் நாட்களை இவ்வாறு வீணாக்கி விட்டேன் என்றா கூறுகிறாய்? நீ என் குருவை அவமதித்ததாலும் எனது கொள்கைகளுக்கு எதிராக இருப்பதாலும் நான் இப்போதே உன்னைக் கொல்லக் கட்டளையிடுகிறேன்! உனக்கும் உன் முட்டாள் தனமான கடவுளைப் பற்றிய பேச்சுக்கும் இது தான் சரியான முற்றுப் புள்ளி வைக்கும்!"

ஆனால் பிரகலாதன் எந்த விதமான பயமும் இன்றி அமைதியாக, ஆனால் ஆணித்தரமாகப் பதிலளித்தான். "ஆம் தந்தையே! நீங்களும் உங்கள் குருவும், இரண்டு பேருமே குருடர்கள் தான். மேலும் நீங்கள் அரக்கர்கள். எனவே நீங்கள் உண்மையைக் காண முடியாத குருடர்கள். நீங்கள் பரம இறைவனுக்கு எப்போதும் கனிந்த இதயங்களுடன் அன்பு சேவைகள் புரிந்து வரும் பக்தர்களை நாடி, அவர்களது உயர்ந்த உபதேசங்கள் எதையும் கேட்காதவர்கள்! அறிவற்றவர்கள்! நீங்கள் ஸ்ரீகிருஷ்ண பக்தர்களின் பாத தூளிகளில் குளித்து உங்கள் மனங்களை தூய்மைப் படுத்த வேண்டும். அந்த மகான்களின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும். நீங்கள் அந்தப் புனிதமான பக்தர்களின் உபதேசங்களைக் கேட்டு உங்கள் புத்தியை ஸ்ரீ கிருஷ்ணரிடம் செலுத்தினால் உங்கள் இதயங்களிலுள்ள அழுக்கெல்லாம் நீங்கும். என் அருமைத் தந்தையே! உங்கள் அகங்காரத்தை விட்டு விட்டு முறையான ஒரு குருவிடம் சரணடையுங்கள். முறையான குரு கொடுக்கும் ஒரே பொக்கிஷம் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நாம் எவ்வாறு அன்பு சேவை செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மட்டுமே. எனவே கிருஷ்ண பக்தர்கள் அளிக்கும் கிருஷ்ண பக்தியினால் மட்டுமே நீங்கள் இந்த உலக சம்பந்தங்களிலிருந்து விடுபட முடியும். வேறு எந்த வழியும் கிடையாது.."

# 7. பிரகலாதனைக் கொல்லவே முடியவில்லை

பிரகலாதனின் பதிலைக் கேட்ட ஹிரண்ய கசிப்புவுக்கு கோபம் இப்போது இன்னமும் அதிகரித்தது. பிரகலாதன் மேல் மிகக் கடுமையாக சீறினான்: "ஓ! இப்போது பார். நான் உன்னைக் கடுமையாகத் தண்டிக்கப் போகிறேன்." என்று கூறியவாறு தன் வாளையும் கதாயுதத்தையும் தூக்கிக் கொண்டு பிரகலாதனைக் கொல்ல உயர்த்தினான். ஆனால் ஆச்சரியமாக, அவனால் ஒன்றுமே செய்ய முடியாமல் நின்றான். தன் தளபதியிடம் ஆணையிட்டான்: "உடனடியாக இப்போதே இவனைக் கொல்லுங்கள்" என்றான். முழு இராணுவமும் பிரகலாதனைக் கொல்வதில் ஈடுபட்டது. ஆனால் எவராலும் எந்த வகையிலும் பிரகலாதனை எதுவுமே செய்ய இயலவில்லை. இதையறிந்த ஹிரண்ய கசிப்பு தனது சேவகர்களிடம் ஒன்றன் பின் ஒன்றாய் ஆணைகள் இட்டான்...



"மத யானைகளைச் செலுத்தி இவனைக் கொல்லுங்கள்"
"மிகக் கொடிய விஷங்கள் கொண்ட பாம்புக் கூண்டுகளில் போடுங்கள். இவன் சாகட்டும்! "


"கடும் விஷத்தைக் குடிக்கக் கொடுங்கள்... "
"அபாயமான சிங்கக் கூண்டுக்குள் போடுங்கள்"

"பெரும் பாறைக் கல்லில் இவனைக் கட்டி, மலையின் உச்சியிலிருந்து உருட்டுங்கள்"
"பெரிய கற்பாறைகளை அவன் மேல் உருட்டுங்கள்..."

இப்படி ஹிரண்ய கசிப்பு எத்தனையோ விதங்களில் முயன்றும் பிரகலாதனை எவராலும் கொல்லவே முடியவில்லை. சிப்பாய்களின் வாள்கள் அவனை வெட்ட முடியவில்லை. மத யானைகள் பிரகலாதனிடம் நெருங்கியதும் அவைகளின் உடல்களில் மின்சாரம் பாய்ந்தது போல் அவை சிதறி ஓடி, பதிலாக நிறைய சிப்பாய்களையும் மற்ற அரக்கர்களையும் கொன்றன. சிங்கங்களோ பிரகலாதனை அன்புடன் நக்கிக் கொடுத்தன. மலையிலிருந்து பிரகலாதனை உருட்டும் போது ஸ்ரீ விஷ்ணுவே தோன்றி அவனைத் தாங்கிக் கொண்டு காப்பாற்றினார்.



அப்போது ஹிரண்ய கசிப்புவுக்கு ஒரு புத்தி சாலித்தனமான எண்ணம் தோன்றியது. அவனுக்கு ஹோலிகா என்று ஒரு மிகவும் அழகும் சக்தியும் வாய்ந்த சகோதரி ஒருத்தி இருந்தாள். அவள் தன் யோக வல்லமையினால் கொழுந்து விட்டெரியும் எவ்வளவு பெரிய தீக்குள்ளும் புகுந்து எரியாமல் இருப்பவள். ஹிரண்ய கசிப்பு அவளை வரவழைத்து, "என் அன்பு சகோதரியே! நீ எனக்கு ஒரு உதவி புரிய வேண்டும். நான் பிரகலாதனைக் கொல்ல என்னவெல்லாமோ செய்து பார்த்து விட்டேன். அவனைக் கொல்லவே முடியவில்லை. இந்த விஷயத்தை முடிக்க, நான் உன்னைத் தான் நம்பியிருக்கிறேன். உனக்கு இது ஒரு சுலபான வேலை. நீ பிரகலாதனைத் தூக்கிக் கொண்டு அவனுடன் ஒரு பெரிய தீயினுள் செல்ல வேண்டும். நிச்சயமாக அது பிரகலாதனைக் கொன்று விடும். ஆனால் நீ மட்டும் ஒன்றுமே ஆகாமல் வந்து விடுவாய். நான் உனக்கு நிறைய செல்வங்கள் அளிப்பேன்" என்று ஆலோசனை கூறினான். பிரகலாதன் மிகவும் அன்பு வைத்திருந்த தன் சொந்த அத்தையே, செல்வத்துக்கு ஆசைப் பட்டுப் பிரகலாதனின் மேல் எந்த விதமான பாசமும் இன்றி அதற்குச் சம்மதித்து விட்டாள்.




ஒரு பெரிய அக்கினிக் குண்டம் உண்டாக்கப்பட்டது. அதிலிருந்து உண்டான தீக் கொழுந்துகள் வானை வரையும் தொட்டன. ஹோலிகா தன்னை மிகவும் நன்றாக அலங்காரம் செய்து கொண்டாள். நிறைய செல்வம் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியுடன் பிரகலாதனைத் தன் இரு கரங்களிலும் தூக்கிக் கொண்டு தீயினுள் புகுந்தாள்.

ஆனால் அங்கே நடந்தது வேறு! அந்த பெரும் தீ, பிரகலாதனை எதுவும் செய்யவில்லை. மாறாக அது ஹோலிகாவை எரித்துச் சாம்பலாக்கியது. அந்தத் தீயினுள் பிரகலாதன் பனி பெய்யும் போது இருக்கும் குளுமையுடன் ஜில்லென்று இருப்பதை உணர்ந்தான். பகவானின் நாமங்களைப் பாட ஆரம்பித்தான்:

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண,
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம,
ராம ராம ஹரே ஹரே! "

ஹிரண்ய கசிப்பாலோ, அவனது பெரும் இராணுவத்தாலோ பிரகலாதனை ஒன்றும் செய்ய இயலவில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் பிரகலாதனைக் காப்பாற்றுவதற்கு ஒரு போதும் தவறவே இல்லை. ஸ்ரீ கிருஷ்ணர் வாக்கு அளித்துள்ளார்: "என்னிடம் சரணடைந்தவர்களை நான் கண்டிப்பாகக் காத்துக் கொள்வேன். அவர்களுக்கு யாருமே தீங்கு செய்ய முடியாது. இந்த உலகம் முழுவதுமே அவர்களுக்கு எதிராகத் திரண்டாலும், அவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது!" பகவான் கூறியது போல் எவரொருவர் நாரதர், வியாஸர், சுக தேவ கோஸ்வாமி, ரூப கோஸ்வாமி, சனாதன கோஸ்வாமி போன்ற முறையான குரு மூலமாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சரணடையும் போது, இந்த உலகமே அவர்களுக்கு எதிராக மாறினாலும் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களைக் காப்பாற்றியே தீருவார். எனவே ஹிரண்ய கசிப்பு அவ்வளவ பலமும் திறமையும் கொண்டிருந்தும் அவனால் பிரகலாதனை ஒன்றுமே செய்ய இயலவில்லை.

# 8. மகா சக்கரவர்த்தியின் கவலை

இப்போது ஹிரண்ய கசிப்புவுக்கு கவலை தோன்றியது. "நான் என்னவென்ன முயற்சிகள் செய்தும் பிரகலாதனை அழிக்க முடியவில்லையே! என்னுடைய அனைத்து முயற்சிகளும் தோற்றுவிட்டன. ஒருவேளை அவனுக்கு அதிகமான சக்திகள் இருக்குமோ? அப்படியானால் அவன் என்னையும் கொன்று விடுவானோ?" என்று அவன் பெருங்கவலை கொண்டான். அவன் பிரம்ம தேவரிடமிருந்து சாக முடியாதவாறு வரம் வாங்கியிருந்தும் இப்போது அவனுக்கு அந்த வரத்திலேயே சந்தேகம் வர ஆரம்பித்து விட்டது. அவ்வளவு பெரிய சக்கரவர்த்தியாகவும் மிகவும் பலமும் திறமையும் கொண்டவனாக இருந்தும், அவனுக்கு இவையெல்லாம் பெரிய புதிராகத் தோன்றின. என்ன செய்ய என்று தெரியாமல் உதவி எதுவுமின்றித் தவித்தான்.

அப்போது சந்தாவும் அமர்க்காவும் அவனுக்கு சமாதானம் அளித்தனர்: "ஓ! தாங்கள் எதற்குமே கவலைப் படத் தேவையில்லை. இந்த அண்டத்திற்கே தாங்கள் சக்கரவர்த்தியாய்

இருக்கும் போது ஏன் நீங்கள் கவலைப் பட வேண்டும்? பிரகலாதன் வெறும் சிறு பாலகன். இந்த ஒரு சிறு விஷயத்துக்குப் போய் ஏன் இவ்வளவு வருத்தப் பட வேண்டும்? அவன் ஒரு கொசு மாதிரி. நினைத்தால் உங்கள் விரல்களாலேயே நசுக்கிக் கொன்று விடலாமே! எங்கள் தந்தையான சுக்கிராச் சாரியார் எல்லாம் அறிந்த மிகப் பெரும் ஞானி. அவர் வருவது வரை நாம் காத்திருப்போம். அவர் வந்ததும் இதைக் கூறுவோம். அவர் இதை மிகவும் எளிதாகத் தீர்த்து விடுவார். அதுவரை நாங்கள் பிரகலாதனைப் பள்ளியில் வைத்து வழக்கம் போல் கற்பிக்கிறோம். எங்கள் தந்தையின் சக்தியோ அளவில்லாதது. அவர் தன் பார்வையினால் மட்டுமே இறந்தவர்களையும் உயிர் பெறச் செய்பவர். அவர் தன் கோபமான புருவத்தால் ஒருவரை சீறிப் பார்த்தாலே போதும். அவர் அப்படியே பொசுங்கிச் சாம்பலாகி விடுவார். அவரது மறுக்க முடியாத வாதத்தால் பிரகலாதனை தன் சுய புத்திக்குக் கொண்டு வந்து விடுவார். அதற்குப் பின் அவன் நிச்சயமாக நாம் சொல்வதைக் கேட்பான். அதுவரை அவன் எங்களுடன் கூட வந்து படிக்கலாம். இதுவே எங்கள் அபிப்பிராயம் " என்று கூறினார்கள்.

# 9. திரும்பவும் பள்ளிக்கு

சந்தா, அமர்க்கா இருவரின் ஆலோசனையின் பேரில் பிரகலாதனை திரும்பவும் பள்ளிக்குச் செல்ல வைத்தார்கள். பிரகலாதனை எப்படியும் தன் அரக்கத் தந்தையின் பாதைக்குக் கொண்டு வந்து விட வேண்டுமென்று கடும் முயற்சி எடுத்துக் கொண்டனர். அவனுக்கு மற்றவர்களை எப்படி ஏமாற்றுவது, எப்படி அளவுக்கு மீறி செல்வம் சேர்ப்பது, எப்படி இந்திரிய சுகங்களை உச்ச அளவுக்கு அனுபவிப்பது போன்ற பற்பல பாடங்களைக் கற்பித்தனர். ஆனால் பிரகலாதனோ அவை எவற்றிலுமே தன்னை ஈடுபடுத்தாமல், திடமுடன் தன் இறை பக்தி சிறு அளவிலும் கூடப் பாதிக்கப் படாமல், தன் மனதில் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜபிப்பதிலும், அவரது லீலைகளையும் கல்யாண குணங்களையும் தியானிப்பதிலேயே எப்போதும் நேரத்தை செலவளித்தான்.

ஒரு நாள் சந்தாவும் அமர்க்காவும் ஏதோ ஒரு விஷயமாக வெளியே செல்ல வேண்டி வந்தது. அவர்கள் பிரகலாதனை வகுப்புத் தலைவனாக நியமித்து விட்டுச் சென்றிருந்தனர். பிரகலாதனிடம், "நாங்கள் சீக்கிரம் திரும்பி வந்து விடுவோம். வகுப்பையும் குழந்தைகளையும் நீ கவனித்துக் கொள். அவர்கள் சண்டை

எதுவும் செய்யாமலும், முழு நேரத்தையும் விளையாட்டில் களிக்காமலும் கவனித்துக் கொள். அவர்கள் அமைதியாகவும் சத்தம் செய்யாமலும் இருக்க வேண்டியது உன் பொறுப்பு. நாங்கள் வெகு சீக்கிரமே திரும்பி வந்து விடுவோம்" என்று கூறி விட்டுச் சென்றிருந்தனர்.

இரு குருக்களும் கிளம்பியதும், எல்லாக் குழந்தைகளும், அரக்கத் தன்மை பெற்றிருந்ததால் உடனே விளையாடுவதற்காகக் குதித்து ஓட ஆரம்பித்தன. அவர்கள் அனைவரையும் பிரகலாதன் அடக்கமுடன் கூப்பிட்டான்:

"ஓ! நண்பர்களே! ஓ அரக்கர்களின் குழந்தைகளே! நான் சொல்லுவதைக் கேளுங்கள். நீங்கள் உங்கள் வாழ் நாட்கள் முழுவதுமே ஆனந்தமாக இருப்பதற்கான பெரும் ரகசியத்தை உங்களுக்கு நான் இன்று கூறுகிறேன். அதன் பின் நீங்கள் விளையாடச் செல்லலாம்" என்று அழைத்தான். பிரகலாதனுக்கு அப்போது வெறும் ஐந்தே வயது ஆகியிருந்தாலும் கூட, எல்லாக் குழந்தைகளும் அவன் கூறுவதைக் கேட்க உட்கார்ந்தன. பிரகலாதன் பின்னர் பேச ஆரம்பித்தான்.

# 10. இப்போதே ஆரம்பியுங்கள்

"என் சகோதரர்களே கேளுங்கள்! நாம் நம் இளமைப் பருவத்திலிருந்தே பரம இறைவனை தியானிக்க வேண்டும். இந்த உலகம், மற்றும் இதிலுள்ள எவையுமே தானாக உண்டாகவில்லை. சிலர் இவையெல்லாம் இயற்கையிலிருந்து உண்டானதாக தவறாகக் கூறுகின்றனர். ஆனால் அந்த இயற்கை யாருடையது? எங்கிருந்து வந்தது? ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு சிறு சக்தியே இயற்கை. அவர் நினைத்தால் அவரால் கோடிக் கணக்கான பிரம்மாண்டங்களை ஒரே நொடியில் படைக்கவும் அவையனைத்தையையும் ஒரே நொடியில் அழிக்கவும் இயலும். இன்னும் அடுத்த நொடியில் அவையெல்லாவற்றையும் திரும்பவும் உண்டாக்கவும் அவரால் முடியும். ஸ்ரீ கிருஷ்ணர் மிகவும் சக்தி வாய்ந்தவர். அது மட்டுமல்ல. அவர் நம் ஒவ்வொருவரையும் நன்றாக அறிவார். ஆனால் நம்மால் தான் அவரை அறிய முடிவதில்லை. நான் என் இடைவிடாத ஜெபத்தாலும் தியானத்தாலும் அவரைப் பற்றி ஓரளவுக்கு அறிய முடிந்தது.

"நாம் அனைவரும் ஆன்மீக வாழ்க்கையில் நம் இளம் பருவத்திலிருந்தே ஈடுபட வேண்டும். இப்போதே, இந்தக்

கணத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். 'நான் நாளையிலிருந்து தொடங்குவேன்' என்று ஒருபோதும் கூறாதீர்கள். நமக்கு நாளை எப்படியும் வரும் என்று என்ன நிச்சயம்? நிரந்தரமில்லாத அழியும் இந்த உலகத்தில் காணும் அற்ப சுகங்களை அனுபவிக்க வேண்டி, கிடைத்த காலத்தை வீணாக்காதீர்கள். இன்றே இப்போதே ஆரம்பியுங்கள். நாளைக்குச் செய்ய வேண்டியதை இன்றும், இன்றைக்கு செய்ய வேண்டியதை இப்பொழுதே செய்யுங்கள். எல்லோரும் பகவானின் நாமத்தை ஜெபியுங்கள்:

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண,
கிருஷ்ண, கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம,
ராம ராம ஹரே ஹரே

நமக்கு, முதுமை, மற்றும் நோய்கள் எல்லாம் எப்படியும் வந்து தான் தீரும். மேலும், நீ என்ன தான் சேர்த்து வைத்தாலும் அதை இறக்கும் போது நம்முடன் ஒரு போதும் கொண்டு செல்ல முடியாது. பணம், புகழ், பெருமை இப்படி என்னவெல்லாம் சம்பாதித்து வைத்தும், இறக்கும் போது எல்லாவற்றையும் விட்டு விட்டே செல்ல வேண்டும். உன்னால் ஒரு பைசா கூட கொண்டு செல்ல முடியாது! நான் சொல்வதெல்லாம் சரிதானா? "

"ஆம். அனைத்தும் சரி!" என்று எல்லா மாணவர்களும் பிரகலாதன் கூறியதை ஆமோதித்தார்கள். "நீ உண்மையைத் தான் கூறுகிறாய்! " என்று அனைவரும் கூறினார்கள்.

பிரகலாதன் தொடர்ந்து பேசினான்: "என் அன்பு நண்பர்களே! அரக்கர்களின் மைந்தர்களே! நம் மனித உடலோ நிலையற்றது. அழிந்து போகக் கூடியது. ஆனால் நம் ஆத்மாவோ நிரந்தரமானது. மனித ஜென்மத்தின் ஒரே குறிக்கோள் நாம் நம்மை அறிந்து கொண்டு, நமது சொந்த வீடான இறைவனின் பாதங்களை அடைவதே. எனவே ஒவ்வொரு ஜீவனும் குறிப்பாக மனித ஜென்மம் எடுத்தவர்கள், பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பக்தி சேவை புரிய வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பக்தி சேவை செய்வதென்பது எல்லா ஜீவன்களுக்கும் இயற்கையாக அமைந்த சுபாவம். ஏனென்றால் ஸ்ரீ கிருஷ்ணரே நம் எல்லா ஜீவன்களுக்கும் காரணமும் ஆதாரமும் ஆகும். அவர் மட்டும் தாம் உண்மையில் நம் நலன்களை நாடுபவர். அவரே ஒவ்வொரு ஜீவனுக்கும் உண்மையான அன்புக்குப் பாத்திரமானவர். எனவே, அவருக்கு அன்பு சேவைகள் புரிந்து அவரிடமே தஞ்சமடைவது தான் நாம் ஒவ்வொருவரின் கடமை. அவ்வாறு நாம் இறைவனுக்குச் சேவை செய்வதில் கிடைக்கும்

பரம ஆனந்தத்தைப் பெற்று, அற்பமான உலக சம்பந்தமான ஆசைகளிலிருந்து விடுதலை அடைவோம். ஒருவன் உலக சம்பந்தங்களிலிருந்து விடுதலை பெற்று விட்டால், ஆன்மீகப் பேரின்ப சுகம் தானாகக் கிடைத்து விடும்.

"எனவே என் சகோதரர்களே! நீங்கள் உடனடியாக, இப்போதிலிருந்தே, எவரையும் கவர்ந்திழுக்கும் அந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை நீங்கள் தியானம் செய்ய ஆரம்பியுங்கள்.




"இந்தக் கணத்திலிருந்தே நீங்கள் ஜெபிக்க ஆரம்பியுங்கள்:

'ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண,
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே,
ஹரே ராம ஹரே ராம,
ராம ராம ஹரே ஹரே!'

நாம் அனைவரும் வயதாகி இறந்து போவோம். எனவே இதை நீங்கள் உங்கள் இளம் வயதிலிருந்தே ஆரம்பித்து விடுங்கள். உங்கள் நேரத்தை வீணாக அரசியல், வஞ்சகம், ஏமாற்றுதல்

இவைகளில் ஒருபோதும் கழிக்காதீர்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே பரம இறைவன். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர். அவர் நம்மிடம் அளவில்லா இரக்கமும் கருணையும் உள்ளவர். அவர் தன் சக்திகளை அவரது நாமங்களிலும் வைத்துள்ளார். எனவே நீங்கள் அவரது நாமங்களை ஜெபிக்கும் போது நீங்கள் அளவில்லாத நன்மைகளை நிச்சயமாகப் பெறுவீர்கள்" என்று பிரகலாதன் அறிவுரை கூறினான்.

அப்போது மாணவர்களில் தலைவனாக இருந்த இன்னொருவன் கேட்டான்: "ஏன் நாம் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபிக்க வேண்டும்? நாம் மிகவும் இளம் குழந்தைகள். நாம் ஏன் விளையாடக் கூடாது? நாம் செல்வம் சேர்ப்பதில் திறமை பெற்று பின்னர் நிறைய செல்வங்களைச் சேர்த்து சுகங்களை அனுப்பவிப்பதில் மட்டுமே நமக்கு உண்மையான ஆனந்தம் கிடைக்கும்."

# 11. உலக வாழ்க்கை நிலையற்றது

பிரகலாதனிடமிருந்து உடனடியாக பதில் வந்தது:
"இல்லவே இல்லை! இவைகளெல்லாம் உண்மையான ஆனந்தத்தை ஒரு போதும் அளிக்காது. முதலில் நீ எவ்வளவு நாள் வரைக்கும் இருப்பாய் என்று கூட உனக்குத் தெரியாது. அப்படியே வயதாவது வரை வாழ்ந்தாலும், பற்பல நோய்களும் வியாதிகளும் பிடித்து, அதன் பின் நீ இறப்பது நிச்சயம். அதுவும் இன்றோ நாளையோ அல்லது இப்போதோ, எந்த நிமிடத்திலும் பேரிடியினால் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே இறந்து போகலாம்" என்று பிரகலாதன் விடை கூறினான்.

நாமும் இதையே தான் காண்கிறோம். விமானத்தில் பயணம் செய்து கொண்டு செல்கிறார்கள். திடீரென்று எஞ்சின் பழுதாகி அதிலிருந்த நானூறு பேர்களும் இறந்து போகிறார்கள். மேலும் அவர்களுடைய உடல், எலும்பு எல்லாம் எங்கே விழுகின்றன என்பது கூட தெரியாது.

பிரகலாதனிடமிருந்து மேலும் பதில் தொடர்ந்து வந்தது: "அப்படி நீ இடையிலேயே சாகாமல் வயதாகும் வரை இருந்தாலும், எண்பது வயதுக்குப் பின் உன்னால் நிமிர்ந்து உட்கார்ந்து ஜெபிக்கவோ தியானம் செய்யவோ கூட முடியாது. விதம் விதமான எத்தனையோ நோய்கள் வரும். வேண்டாததற்கு உன் மருமகளே உனக்கு நிறைய பிரச்சினைகளையும் வருத்தங்களையும்

கொண்டு வருவாள். துடைப்பத்தால் உன்னை அடிப்பாள்! குளிர், வெப்பம், புயல், காற்று, மழை, பூகம்பம் இப்படி மேலும் எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் உன்னால் எப்படிப் பகவானைப் பற்றித் தியானிக்கவோ நினைக்கவோ முடியும்? உனது தொண்டை அடைத்து பேசவே முடியாமலாகலாம். இல்லை உனக்கு புத்தி தடுமாற்றமோ பைத்தியமோ கூடப் பிடிக்கலாம். இப்படி எத்தனையோ கஷ்டங்களால் உன்னால் பகவானை நினைக்க முடியாமலேயே போய் விடும். எனவே பகவானை இப்போதே நாம் தியானிக்க வேண்டும்.

"இந்த மனிதப் பிறவியின் ஒரே காரணம் என்ன? உனக்கும் பரம இறைவனான பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குமுள்ள சம்பந்தத்தைத் துலக்குவதே அது! எனவே இந்தப் பிறப்பு உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகவும் அரிதான ஒரு தருணமே! நீ இந்த அரிய வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு, அவருக்கு ஆனந்தமாகச் சேவை செய்தால், அறுக்க முடியாத சங்கிலித் தொடர்பு போன்ற பிறப்பு இறப்புகளிலிருந்து விடு பட்டு, சுதந்திரமாக ஸ்ரீ கிருஷ்ணருடன் பேரானந்தமுடன் வாழலாம். உண்மையான ஆனந்தம் அவருடன் நிரந்தரமாக அவரது ஆன்மீக உலகத்தில் வாழ்வதே.

"உலக சம்பந்தமான பிணைப்புக்கள், குறிப்பாகக் குடும்ப வாழ்க்கையில் கிடைக்கும் பொய்யான அற்ப மகிழ்ச்சிகள், ஒருவனைப் பக்தி சாதகங்களில் ஈடுபட முடியாமல் செய்கிறது. மேலும் நீ வயதான காலத்தில் திருமணம் செய்தால் உன்னுடைய இளம் மனைவியையும், அழும் பச்சிளங் குழந்தைகளையும் நீ எப்படி விட முடியும்? உன் தகப்பனார் மிகவும் வயதாகும் போது நீ அவரை எப்படி ஒதுக்க முடியும்? உன்னுடைய குழந்தைகள், "அப்பா, அம்மா" என்று உன்னை மிக இனிமையாக அழைக்கும் போது நீ அவர்களை எப்படி விட முடியும்? உன்னுடைய அழகான நாய், அழகான தோட்டங்கள் இவைகளை எல்லாம் நீ எப்படி விட முடியும்?

"ஒருவனது ஆத்மா ஆன்மீக ஞானத்தில் விழிப்படையும் போது, அவன் தன் உண்மையான நிரந்தர சொரூபத்தை அறிகிறான். பகவானுக்கு அன்பு சேவைகள் செய்வது மட்டுமே உண்மையான ஆனந்தம் என்பதை அப்போது அவன் அறிகிறான். வேறு எந்த விதமான உலக பந்தங்களும் அப்போது அவனுக்கு முக்கியமாகத் தெரிவதில்லை. நீங்கள் இந்த இளம் வயதிலேயே, உலக இன்பங்களை ருசிப்பதற்காக தீட்டியிருக்கும் திட்டங்கள் அனைத்தையும் எறிந்து விட்டு, ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதிலும்

அவரது நாமங்களை ஜெபிப்பதிலும் ஈடுபடுவது நல்லது. நமக்குக் கிடைத்திருக்கும் இந்த மானிட ஜன்மம் மிக மிக அரியது. இது நிரந்தரமானது அல்லவென்றாலும், இதனால் நாம் இறைவனுக்கு பக்தி சேவைகள் புரிவதற்கு அனுகூலமாகிறது. சிறிதளவு பக்தி சேவைகள் செய்தால் கூட அது பூரண பலனைக் கொடுக்கிறது. எனவே நீ ஆனந்தமாக இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? பக்தி யோகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணருக்கு இப்போதிலிருந்தே சேவை செய்ய ஆரம்பியுங்கள்!" என்று பிரகலாதன் விவரமாக எடுத்துக் கூறினான்.

# 12. கிருஷ்ண பக்தியே பேரானந்தம்

உங்கள் வாழ்க்கையின் ஆரம்பமான இளம் பிராயத்திலிருந்தே உங்களை ஸ்ரீ கிருஷ்ணருக்கு அர்ப்பணித்து விடுங்கள். நான் சொல்லும் இந்த அறிவுரைகளை நீங்கள் எந்த வயதில் கேட்கிறீர்களோ - ஐம்பது வயதாக இருந்தாலும் கூட பரவாயில்லை. நீங்கள் பக்தி சாதகங்களை இப்போதே ஆரம்பிக்கலாம். போன ஜன்மங்களில் உங்களுக்குக் கிடைத்த பக்தர்களின் தொடர்பினால் தான் இந்த அறிவுரைகளை நீங்கள் இப்போது கேட்கிறீர்கள். போன ஜன்மங்களில் சேர்ந்த புண்ணியங்களால் தான் இந்த ஜன்மத்தில் இந்த ஞானங்களை நீங்கள் கேட்கிறீர்கள்.




எனவே நாம் ஒருபோதும் நம் நேரத்தை ஜட உலக இன்பங்கள் மற்றும் அற்பமான செயல்களில் வீணாக்கக் கூடாது. ஏன்? நீ எந்த ஒரு ஜென்மம் எடுத்தாலும் இந்திரிய சுகங்களை அனுபவிக்க முடியும். நீ ஒரு நாயோ அல்லது பன்றியின் உடலில் இருந்தால் எண்ணிக்கையில்லாத மனைவிகளைச் சேர்த்துக் கொள்ளலாம். மேலும்

அப்படிப் பட்ட ஜன்மங்களில் விவாகரத்து போன்ற சிரமங்கள் கூட கிடையாது. எந்த விதமான பொருளோ பணமோ செலவழிக்க வேண்டியதும் கிடையாது. எனவே சுதந்திரமாக நீ எத்தனையெத்தனையோ புதுப் புது மனைவிகள் மூலம் சுகமடையலாம். அது மட்டுமல்ல, சட்டங்களைக் கொண்ட நீதி மன்றத்துக்கு உன்னை எவரும் இழுத்துச் சென்று விடுவார்களோ என்று பயங்கொள்ளத் தேவையில்லை. உன் குழந்தைகளை வளர்த்து அவர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை கூட கிடையாது.

மனித ஜன்மத்தில் உனக்கு ஒரு வருடத்துக்கு ஒரே ஒரு குழந்தை தான் பிறக்கும். சில சமயங்களில் இரட்டைக் குழந்தைகள் பிறக்கலாம். ஆனால் அது மிகவும் அரிது. ஆனால் நீ பன்றி அல்லது நாய் போன்ற ஜென்மங்கள் எடுத்தால் உனக்கு எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு குட்டிகள் ஒரே நேரத்தில் பிறக்கும். உண்மையில் இந்த விஷயத்தில் அவர்கள் நம்மை விடவும் சிறந்தவர்கள். இவ்வாறு ஒருவன் எந்த விதமான பிராணியாகப் பிறந்தாலும் சிற்றின்பத்துக்கு ஒரு குறைவும் இல்லை. அது மட்டுமல்ல அத்தகைய பிராணி அல்லது விலங்குகள் உன்னை விடவும் எவ்வளவோ மிகுந்த அளவில் சிற்றின்பங்களை அனுபவிக்கின்றன. ஆனால் கிடைத்தற்கரிய மானிடப் பிறவி எடுத்த நீ உன்னை சிற்றின்ப நுகர்ச்சியில் ஆழ்த்தி இந்திரிய சுகங்களை அனுபவிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு விடாதே. உன் வாழ்க்கையில் ஆரம்பத்திலிருந்தே ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபித்தும் அவரை நினைத்தும் தியானித்தும் வர வேண்டும்.

மேலும், வாழ்க்கையில் துன்பங்கள் வரும் என்பது எவரும் அறிந்ததே. அவை நாம் அழைக்காமலேயே வருபவை! இறப்பு, முதுமை, நோய்கள், பக்கத்தாருடன் சண்டைகள் இப்படி எத்தனை எத்தனையோ கஷ்டங்கள் வருகின்றன. வேண்டாததற்கு அரசாங்கம் வேறு எத்தனை எத்தனையோ பிரச்சினைகளைக் கொடுக்கிறது. இவையெல்லாம் எந்த விதமான எச்சரிக்கையுமின்றி அழைக்காமல் வருகின்றன. இதே விதி தான் நமது மகிழ்ச்சிக்கும் பொருந்தும். நமது முன் ஜென்ம கர்மங்களின் படி நமக்கு குறிப்பிட்ட அளவுக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது. அது தானாகவே வரும். அதற்காக நாம் எதுவும் செய்யத் தேவையில்லை.

நாம் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தால் எல்லா விதமான சந்தோஷங்களும் தானாக அழைப்பு எதுவுமின்றி வரும். பின் ஏன்

நாம் அதற்காகக் கவலைப் பட வேண்டும்? இந்த ஜன்மத்தில் நாம் உலக இன்பத்துக்காக எந்த விதமான முயற்சியும் செய்யத் தேவையில்லை. அதே போல் நமது கஷ்டங்களை நீக்குவதற்கும் கவலைப் படத் தேவையில்லை.

உலக இன்பத்துக்காக முயற்சி செய்வதும் கஷ்டங்களைத் தீர்க்கப் பாடு படுவதும் நம் வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல. நாம் விரும்புகிறோமோ விரும்பவில்லையோ கஷ்டங்கள் வந்து தான் தீரும். அவைகள் நம்மை அந்தத் துன்பங்கள் அனைத்தையும் அனுபவிக்க வைத்தே தான் தீரும். நம் முந்திய ஜன்மங்களில் செய்த கர்மாக்களின் பலன்களை நாம் கண்டிப்பாக அனுபவித்தே தீர வேண்டும். அப்படியிருக்கும் போது ஏன் நாம் நமது மகிழ்ச்சியைப் பற்றியும் கஷ்டங்களைப் பற்றியும் கவலைப் பட்டு நம் நேரத்தை வீணாக்க வேண்டும்?

அதற்குப் பதிலாக நாம் ஸ்ரீ கிருஷ்ணரின் புனிதமான நாமங்களை ஜெபிக்க வேண்டும். அவை மிகவும் சக்தி வாய்ந்தவை. ஸ்ரீ கிருஷ்ணர் தன் நாமங்களை அவரை விடவும் கருணையும் அழகும் கூடியதாகப் படைத்துள்ளார். நாம் அவரது நாமங்களை வெறும் சப்தங்கள் என்று ஒருபோதும் கருதவேக் கூடாது. மாறாக, அவைகள் மிக மிக சக்தி வாய்ந்தவை. எனவே, நாம் நம் வாழ்க்கையில் ஆரம்பத்திலிருந்தே அவரது புனிதமான நாமங்களை ஜெபிக்க வேண்டும்.

# 13. மனித ஜென்மம் விலை மதிக்க முடியாதது

தற்போது நடந்து கொண்டிருக்கும் வெளிவேடமும் சண்டை சச்சரவுகளும் மலிந்த கலியுகத்தில் ஒருவன் சுமார் 100 வருடங்கள் வரை வாழ்கிறான். ஆனால் இலட்சக் கணக்கான வருடங்களுக்கு முன்னால் பழைய யுகங்களில் மனிதன் நினைக்க முடியாத அளவு வருடங்கள் வாழ்ந்தான். உண்மையும் தூய்மையும் நிறைந்த சத்திய யுகத்தில் மனிதர்கள் நூறாயிரம் வருடங்களுக்கு மேலும் வாழ்ந்தார்கள். சிலர் அநேகமாக சாகாமலேயே இருந்தனர்.
அதற்குப் பின்னர் வந்த திரேத யுகத்தில் மனிதர்கள் சுமார் பத்தாயிரம் வருடங்கள் வாழ்ந்தார்கள். அதன் பின் வந்த துவாபர யுகத்தில் மனிதர்கள் கிட்டத் தட்ட ஆயிரம் வருடங்கள்

வாழ்ந்தனர். இப்போதுள்ள கலியுலகத்தில், மனிதர்கள் தன் இந்திரியங்களைக் கூட கட்டுப் படுத்த முடியாதவர்களாகி விஸ்கி, சிகரெட், முட்டை, மாமிசம், திராட்சை மது போன்றவை அனைத்தையும் சாப்பிடுகிறார்கள். இவை அவர்களது வாழ் நாட்களை மேலும் குறைக்கிறது. கலியுகத்தில் மருத்துவர்களாலோ விஞ்ஞானிகளாலோ தீர்க்க முடியாத எலும்புருக்கி நோயான காச நோய், புற்று நோய் இப்படி நிறைய நோய்கள் தோன்றியுள்ளன. மேலும், புதுப்புது நோய்களான எய்ட்ஸ் போன்றவைகளும் உருவாகியுள்ளன. இவையெல்லாம் எங்கிருந்து வருகின்றன என்று நமக்குத் தெரியவில்லை என்றாலும், அவை அளவு கடந்த இந்திரிய சுகங்களின் காரணமாக வருவது என்பதில் சந்தேகமேயில்லை.

பிரகலாதன் தன்னுடைய சக மாணவர்களுக்கு மேலும் போதனைகள் வழங்கினான். "நீ நூறு வருடங்கள் வாழ்ந்தாயானால் அதில் பாதி தூக்கத்திலேயே போய் விடுகிறது. மீதி ஐம்பது வருடங்கள் தான் உள்ளன. அதிலும் உன் பழக்க வழக்கங்களைக் கட்டுப் படுத்தாமல் வாழ்ந்திருந்தால் இதை விடவும் குறைவாகவே உன் வாழ் நாட்கள் இருக்கும். இளம் பருவத்திலிருந்து இருபது வயது வரைக்கும் வீணாக விளையாட்டுகளிலும், படிப்பிலும் அதன் பின்னர் வாழ்க்கைக்கு வேண்டிய செல்வம் சம்பாதிக்கத் தேவையான திறமையை வளர்க்கும் படிப்புகளிலுமாக வருடங்கள் வேகமாக செலவாகி விடுகின்றன. பெரும் பாலான மனிதர்களுக்கு எண்பது வயதிலிருந்து நூறு வயது வரை எந்த விதமான உபயோகமும் கிடையாது. உன்னால் உட்கார்ந்து இருக்கவோ, தியானம் செய்யவோ - சொல்லப் போனால் எதற்குமே முடிவதில்லை. அதற்கு முன்னால் கிடைத்த நாட்களோ திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் செலவாகி விடுகிறது."

தற்போதெல்லாம் ஜனங்கள் திருமணம் ஒன்றல்ல - எத்தனையோ தடவைகள் விவாகரத்துகள் செய்து கொண்டே - பற்பல தடவைகள் திருமணம் செய்து கொள்கின்றனர். உண்மையில் இதில் எந்த விதமான இலாபமும் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. இப்படி ஒவ்வொரு தடவை திருமணம் செய்யும் போதும் மேலும் குழந்தைகள் தோன்றுகின்றன. அவர்களை வளர்க்கவும் படிப்பிக்கவும் அவர்களது தேவைகளைக் கவனிப்பதும் இப்படியாக மேலும் அதிகமாகப் பொறுப்புகள் தான் சுமத்தப்படுகின்றன. மேலும் சமுதாயத்தில் நிகராக வாழ கார், வீடு, டெலிவிஷன், கம்பியூட்டர் இப்படி எத்தனை எத்தனையோ இத்யாதிகள் தேவைப்

படுகின்றன. இவை எல்லாவற்றுக்குமிடையில் ஒருவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணரை நினைக்கவோ அவரை வழிபடுவதற்கோ எப்படி நேரம் கிடைக்கும்? ஒரு போதும் கிடைக்கவே கிடைக்காது.

பிரகலாதன் கூறிய அனைத்தையும் கேட்ட சக மாணவர்களும் உடனே ஆவலாக, ''அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? '' என்று கேட்டனர்.

பிரகலாதன் பதிலளித்தான்: ''செல்வம் சேர்ப்பதிலோ மற்றும் வேறு எதைப் பற்றியும் கவலைப் படாதீர்கள். உலக சம்பந்தமான மகிழ்ச்சியை அடைவதோ, கஷ்டங்களைத் தவிர்ப்பதோ நம் வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல. நமக்கு என்னென்ன மகிழ்ச்சிகளும், என்னென்ன கஷ்டங்களும் வரவேண்டுமென்பதை எப்போதோ நம் தலையில் எழுதப் பட்டு விட்டன. நம் முந்தைய ஜென்ம கருமங்களைப் பொறுத்து அவை நிர்ணயிக்கப் பட்டுவிட்டன. கஷ்டங்கள் நமக்கு வேண்டாமென்றாலும் அவை வந்தே தீரும். நமக்கு வயதாகக் கூடாது என்று நினைத்தாலும் அது ஆகியே தான் தீரும். நாம் சாகக் கூடாது என்று விரும்புகிறோம். ஆனால் சாவு வந்தே தான் தீரும். நம் கணவரோ மனைவியோ விவாகரத்து செய்து விடக் கூடாது என்று வேண்டுகிறோம். ஆனால் அதுவும் எப்படியோ வந்து விடுகிறது. நாம் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் தானாகவே கஷ்டங்கள் வந்து விடுகின்றன. அவற்றைத் தவிர்க்க முடிவதில்லை. இதேபோல் தான் சந்தோஷமும் தானாக நம்மிடம் வந்து சேரும். ஆனால் நாம் அதைப் பற்றி அக்கரை எதுவும் கொள்ளக் கூடாது. நாம் நம் சக்தி அனைத்தையும் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபிப்பதில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தினால், நாம் எப்போதும் ஆனந்தமாக இருப்போம். "ஹரே கிருஷ்ணா" என்று ஜெபிப்பதே எல்லா விதமான கஷ்டங்களுக்கும் மருந்தாகும். அது மிகவும் சக்தி வாய்ந்தது. சக்கரம் போல் முடிவில்லாமல் சுழன்று கொண்டிருக்கும் நம் பிறப்பு இறப்புக்கள் அனைத்தையும் அது உடைத்து அறுத்து விடும். இது தான் ஒரே வழி! "

இதைக் கேட்ட பிரகலாதனின் சக மாணவர்கள், "பிரகலாதனே, நீ கூறியது அனைத்தும் மிகச் சரியானது. தயவு செய்து எங்களுக்கு பகவானுக்கு எப்படி சேவை புரிய வேண்டும் என்பதைக் கூற வேண்டும். அதற்குள்ள வழிமுறைகளை தயவு செய்து எங்களுக்கு சொல்" என்று கேட்டனர்.
பிரகலாதனிடமிருந்து தக்க பதில் வந்தது: "நீங்கள் முறையாக பரம்பரையில் வரும் குருவிடம் சரணடைந்து அவருக்கு எல்லா

விதங்களிலும் சேவை செய்ய வேண்டும். அந்தக் குருவை நீங்கள் உங்கள் அப்பா, அம்மா மற்றும் மிகப் பிரியமான சொந்தக்காரர்களை விடவும் மேலாகப் பாவிக்க வேண்டும். அவரிடமிருந்து ஞானத்தைப் பெற நீங்கள் அவருக்கு சேவை செய்ய வேண்டும். அந்த சேவை உங்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணருக்கு எவ்வாறு பக்தி சேவை செய்ய வேண்டுமென்ற ஞானத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய சக்தியை அளிக்கும்."

இளவரசனான பிரகலாதன் தன் பள்ளி மாணவ தோழர்களைப் பார்த்து, "நான் கூறியவற்றிலிருந்து இப்போது உங்கள் ஐயங்கள் எல்லாம் தீர்ந்து நம்பிக்கை வந்துள்ளதா?" என்று கேட்டான். பிரகலாதன் அளித்த அறிவுரைகளைக் கேட்ட பள்ளி மாணவர்கள் அனைவரும் மிகவும் ஆச்சரியமடைந்திருந்தனர். "ஓ, ஆமாம். எங்களுக்கு இப்போது எல்லாம் நன்றாகப் புரிந்துள்ளது. ஆனால் இவை எல்லாவற்றையும் நீ எங்கிருந்து படித்தாய்?" என்று கேட்டனர்.


பிரகலாதன் அவர்களுக்கு, தனது தந்தை பெரும் சக்திகளை வேண்டிக் காட்டில் தவம் செய்ய சென்ற போது தனது தாயார் கயாது பிரகலாதனைக் கர்ப்பத்தில் கொண்டிருந்ததையும், மகா பெரும் முனிவரான நாரதரின் ஆஸ்ரமத்தில் அவர்கள் தங்கியிருந்த போது அவர் அவனுக்கு கர்ப்பத்தில் இருக்கும் போதே ஸ்ரீ கிருஷ்ணரின் திருவடி சேவைகளைப் பற்றிப் போதித்ததையும் விளக்கமாகக் கூறினான். தன் தாயாரின் கர்ப்பத்திலிருக்கும் போதே பிரகலாதன் வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள், ஸ்ரீமத் பாகவதம் அனைத்தையும் கேட்டிருந்தான். எனவே நாரத முனிவரின் கருணையினால், பிறக்கும் போதே பிரகலாதன் முற்றும் அறிந்த ஞானியாகவும் பக்தனாகவும் ஆகியிருந்தான்.

# 14. பிரகலாதன் அரக்கக் குழந்தைகளைச் சேர்த்தான்

பிரகலாதன் எல்லா சக மாணவர்களையும் கூப்பிட்டான்: "நீங்கள் எல்லோரும் இப்போது உண்மை என்னவென்பதை ஒத்துக் கொண்டீர்கள். அனைவரும் வாருங்கள்! நாம் இப்போதே பகவானின் நாமங்களை சத்தமாக ஆடியும் பாடியும்

மகிழ்வடைவோம்!" இவ்வாறு சக தோழர்கள் அனைவருடன் அவன் நாம சங்கீர்த்தனத்தை ஆரம்பித்தான்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே





எல்லாக் குழந்தைகளும் பேரானந்தமுடன் குதித்துக் குதித்துப் பாடி ஆடினார்கள். எவ்வளவு நேரம் அவர்கள் இப்படி ஹரி நாம சங்கீர்த்தனம் செய்தார்கள் என்று தெரியவில்லை!

பள்ளி மாணவர்கள் அனைவரும் இவ்வாறு ஆடிப் பாடியதை எப்படியோ ஹிரண்ய கசிப்பு கேட்டு விட்டான். தாங்க முடியாத எரிச்சலும் கோபமும் கொண்டு, "என்னிடமே சவால் விடுவது மட்டுமின்றி இப்போது எல்லாக் குழந்தைகளையும் கூட எனக்கு எதிராக ஆக்கி விட்டான். இப்போது எல்லா குழந்தைகளுமே கெட்டுப் போய் விட்டார்கள். இதை இனிமேலும் விட்டு வைத்தால் அது மிகவும் அபாயமானது!" என்று பொருமினான். உடனே அவன் பிரகலாதனையும் அவனது சக மாணவர்கள் அனைவரையும் தன் சபையில் கொண்டு வந்து நிறுத்தினான்.

"பிரகலாதா!  நீ ஏன்  இப்படிச் செய்கிறாய்? " என்று கேட்டான். அதைக் கண்ட பள்ளி  சிறுவர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர். ஹிரண்ய கசிப்பு அந்தக் குழந்தைகளையும் உலுக்கினான்: "ஏய்! சிரிப்பை நிறுத்துங்கள். ஏன் நீங்கள் இவ்வளவு உஷாராக இருக்கிறீர்கள்?  நீங்கள் இப்போது கிருஷ்ணரின் பக்தர்கள் ஆகி விட்டீர்களா? நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் ஹிரண்ய கசிப்பு - இந்த உலகங்களுக்கெல்லாம் அதிபதி நான்.  உங்களுக்கு என் மேல் பயமில்லை? "

ஹிரண்ய கசிப்புவின் ஆத்திரம் அளவு கடந்தது. உடனே தனது வாளையும் கதாயுதத்தையும் கையில் எடுத்துக் கொண்டு பிரகலாதனை பயமுறுத்தினான்:
"உனக்கு சாவில் பயமிருக்கிறதா? உனக்கு இவ்வளவு தைரியம் எங்கிருந்து வருகிறது. யார் உன்னை எப்போதும் பாதுகாக்கிறார்? " என்று கர்ச்சித்தான்.

அதற்குப் பிரகலாதனோ மிகவும் அடக்கமுடன் அமைதியாகப் பதிலளித்தான். "ஓ, என் அன்பு தந்தையே! என்னைப் பாதுகாக்கும் அதே பகவான் தான் உங்களையும் மற்றும் எல்லோரையும் கூட பாதுகாப்பவர். அவர் எங்கிலும் இருக்கிறார். எல்லாமே அவரிடம் அடங்கியுள்ளன. ஸ்ரீ கிருஷ்ணரின் சக்தியே உங்கள் சக்தி, என் சக்தி மட்டுமின்றி, அவரே எல்லா ஜீவராசிகளுக்கும் சக்தியை அளிப்பவர்" என்று பதிலளித்தான்.



ஹிரண்ய கசிப்பு கோபத்துடன் கேட்டான்: "உன் கிருஷ்ணன் எங்கேயிருக்கிறான்? உன் விஷ்ணு எங்கேயிருக்கிறான்? "

அதற்கு பிரகலாதன், "எனது விஷ்ணு எங்கிலும் இருக்கிறார் " என்று நிதமாக பதிலளித்தான்.

"அவன் இந்த தூணில் இருக்கிறானா? "
"ஓ! ஆமாம். அவரில்லாத இடமே கிடையாது. அவர் ஒவ்வொரு அணுவில் மட்டுமின்றி எல்லா ஜீவராசிகளின் இதயங்களிலும் வீற்றிருக்கிறார். "
"என் கண்ணுக்கு அப்படி எதுவும் தெரியவில்லை"
"ஆனால் நான் அவரைக் காண்கிறேன். ஆம் என் விஷ்ணு அங்கே இருக்கிறார்!"
"நான் இப்போதே இதை இரண்டிலொன்று பார்த்து விடுகிறேன். நான் உன்னை இப்போதே கொல்லப் போகிறேன். உன் விஷ்ணு வந்து உன்னைக் காக்கப் போகிறானா என்று பார்த்து விடுவோம்! அவன் வந்தால் நான் நேருக்கு நேராக ஒரு வழி பார்த்து விடுகிறேன்."

# 15. நரசிம்ம பகவானின் அற்புதமான தோற்றம்

ஹிரண்ய கசிப்பு தன் வாளைக் கொண்டு சவால் விட்டவாறே கடுமையான கோபம் கொப்பளிக்க, பக்கத்திலிருந்த தூணின் மேல் தன் பலமான கை முஷ்டியைத் தூக்கி ஓங்கியடித்தான். அவ்வளவு தான்! இடிபோன்ற கர்ச்சிக்கும் குரல் கேட்டது. ஹிரண்ய கசிப்பு இந்த சப்தம் எங்கிருந்து வருகிறது என்று சுற்றிலும் பார்த்தான். அப்போது தூணைப் பிளந்து கொண்டு ஒரு ஆச்சரியமான உருவம் வெளிப்பட்டது. எல்லாம் வல்ல பகவான் நரசிம்ம தேவர் கடுமையான குரலில் கர்ச்சித்தவாறு தோன்றினார். அவர் மனித ரூபமுமில்லை. சிங்க ரூபமாகவும் இல்லை. இரண்டும் சேர்ந்த நரசிம்மராக கோரம் கொண்டு எவரையும் பீதியடைய வைக்கும் பயமான பெரும் உருவத்தில் தோன்றினார். மேலே சிங்க முகம். கீழே வலிமை மிகுந்த அழகான மனித உடல்!

ஸ்ரீ நரசிம்ம பகவானின் முகத்தில் கோபம் அளவில்லாமல் அனலாகப் பறந்தது. வானம் வரையிலும் பறந்த அவரது சிங்க


தலை முடிகளிலிருந்து தீக்கனல்கள் பறந்து கொண்டிருந்தன. உலகமே தீப்பற்றி எரிந்தது போல் தோன்றியது.

ஹிரண்ய கசிப்பு குழம்பினான்: "இது மனிதனா அல்லது சிங்கமா? " தன் கதாயுதத்தைத் தூக்கிக் கொண்டு பலமுடன் அந்தப் பெரும் அதிசய பிராணியின் மேல் அடித்தான். அவர்கள் இருவரும் கையோடு கை சேர்த்து மல்யுத்தர்கள் சண்டை போடுவது போல் சண்டை செய்தனர். மூலைக்கு மூலையாக உருண்டனர்.

பின்னர் நரசிம்ம பகவான் ஹிரண்ய கசிப்புவைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். ஹிரண்ய கசிப்பு தன் கைகளிலிருந்து தப்புவதற்காக முயன்ற போது நரசிம்ம தேவர் தன் கைப்பிடியை வேண்டுமென்றே சிறிது தளர விட்டு ஹிரண்ய கசிப்புவை தன் பிடியிலிருந்து நழுவ விட்டார். ஹிரண்ய கசிப்பு நரசிம்மரின் கையிலிருந்து விடுவித்து விட்டு வந்ததும் அதைப் பார்த்துக் கொண்டிருந்த அனைத்துத் தேவர்களும் பெரும் கவலை கொண்டனர்.

நரசிம்ம பகவான் ஹிரண்ய கசிப்புவைக் கொல்ல முடியாமல் போனால் அவன் தேவர்களை இன்னமும் அதிகமாகத் தொல்லை செய்வது மட்டுமின்றி, அண்ட சராசங்களிலுமுள்ள எல்லா உயிர்களையும் வதை செய்து விடுவான் என்று அஞ்சினர். "ஐயகோ! இப்போது ஹிரண்ய கசிப்பு நரசிம்மரைக் கொன்று விடுவான். அதன் பின் அவன் நாம் அனைவரையும் கொன்று தீர்த்து விடுவான்" என்று அஞ்சினார்கள்.

ஆனால் உண்மையில் நரசிம்ம பகவான் ஹிரண்ய கசிப்புவிடம், கருடன் பாம்பினிடம் கொஞ்ச நேரம் விளையாடுவது போல், நரசிம்ம தேவர் விளையாட்டுக் காட்டினார். சிறிது மூச்சை எடுத்த பின், ஹிரண்ய கசிப்பு தன் வாளை உருவிக் கொண்டு அவனது முழுப் பலத்தையும் கொண்டு நரசிம்மரைக் குத்துவதற்காக ஓடினான். நரசிம்ம பகவானோ அவனை அலாக்காகப் பிடித்துக் கொண்டு, தன் மடியில் கிடத்தினார். சிங்கம் போல் பெரும் சத்தத்துடன் கர்ச்சித்தவாறு அனல் பறக்கும் கோபத்துடன் தன் நகங்களால் ஹிரண்ய கசிப்புவின் வயிற்றைக் கிழித்தார். உள்ளிருந்த குடலை உருவி இரத்தம் சொட்டச் சொட்ட அதைத் தன் கழுத்தில் மாலையாகப் போட்டார். அரக்கன் உடனே இறந்தான். ஆனால் கோபம் தணியாத பகவானோ கோபத்தால் தொடர்ந்து கர்ச்சித்துக் கொண்டே இருந்தார். அனைவரும் பீதியடைந்தனர்.



பிரம்மதேவர் கொடுத்த வரத்தை நிறைவேற்றுவதற்காகவே பகவான் இப்படிப்பட்ட உருவத்தை எடுக்க வேண்டி வந்தது. பிரம்மாவிடம் ஹிரண்ய கசிப்பு, தான் எந்த மனிதனாலோ மிருகத்தாலோ கொல்லப்படக் கூடாது, பகலிலோ இருளிலோ கொல்லப் படக் கூடாது, உள்ளோ வெளியோ வைத்துக் கொல்லப் படக் கூடாது, மண்ணிலோ விண்ணிலோ வைத்துக் கொல்லப் படக் கூடாது, வருடங்களில் வரும் பன்னிரண்டு மாதங்களிலும் கொல்லப் படக் கூடாது, ஆயுதங்களால் கொல்லப் படக் கூடாது, இறந்தவைகளாலோ உயிருள்ளவைகளாலோ கொல்லப் படக் கூடாது என்று மிகவும் குழப்பமான வரம் வாங்கியிருந்தான். எனவே தான், பகவான் அவனை அரை மனித அரை சிங்க வடிவுடன் பகலும் இரவும் இல்லாத அந்தி

வேளையில், சாதாரண மாதங்களில் அல்லாத லீப் போன்ற நாளில், உள்ளோ வெளியோ இல்லாமல் வாசலில் வைத்து, ஆயுதங்கள் எதுவுமின்றி, உயிர் இல்லாததும் அதே சமயம் இறக்காமலிருக்கும் நகங்களைக் கொண்டும் வதம் செய்தார்.

# 16. பிரகலாதன் மேல் பகவானின் அன்பு

நரசிம்மரின் கோபம் இன்னமும் தணியவில்லை. அவரது கோபத்திற்கு முன் எவரும் அருகில் செல்லுவதற்கு அச்சமடைந்தனர். ஸ்ரீ பரமசிவன், ஸ்ரீ பிரம்ம தேவர் முதற்கொண்டு எல்லா தேவர்களும் பகவானிடமிருந்து தூரத்திலேயே தான் நின்று கொண்டிருந்தனர். இலட்சுமி தேவி சிவபெருமானையும் பிரம்ம தேவரையும் தன்னோடு அழைத்துக் கொண்டு நரசிம்மரிடம் சென்று அவரது கோபத்தை தணிய வைக்கலாமென்றால், எவருமே பக்கம் வருவதற்குப் பயந்தனர். அவர்கள் பக்கத்தில் நின்றிருந்த பிரகலாதனைப் பார்த்துக் கேட்டனர்:

"குழந்தாய் ! எந்த ஒரு குழந்தைக்காக நரசிம்ம தேவர் இங்கு தோன்றினாரோ அந்தக் குழந்தையான உன்னால் மட்டும் தான் அவரது கோபத்தை தணிக்க முடியும். எனவே நீ பகவானிடம் போய் அவரைச் சாந்திப் படுத்த வேண்டும்!"

இதைக் கேட்ட பிரகலாதன், உடனே மகிழ்ச்சியுடன் நரசிம்ம தேவரை நோக்கி ஓடினான். அவரது மடியில் ஏறி உட்காரவும் செய்தான்.

பிரகலாதனைக் கண்டதும் நரசிம்மரின் கோபம் உடனே தணிந்து அமைதியானார். அவரது இதயம் இளகியது. கண்ணீர் விட்டவாறே பிரகலாதனை அன்புடன் தடவிக் கொடுத்தார். "ஓ பிரகலாதா! என் அன்பு மைந்தனே. நான் வருவதற்கு இவ்வளவு நாட்கள் ஆனதற்காக என்னை நீ மன்னிக்க வேண்டும். நான் சீக்கிரமாகவே வருவதற்கு ஆசைப்பட்டேன். ஆனால் இப்போது தான் என்னால் வர முடிந்தது. பிரம்மாவிடன் உன் தந்தை சாதாரண எந்த மாதங்களிலும் கொல்ல முடியாத வரத்தை வாங்கியிருந்ததால் இது வரைக்கும் என்னால் வர முடியவில்லை. சரியான தருணத்துக்காகக் காத்திருந்தேன். மேலும் உன் மேன்மையான பக்தியை உலகுக்குத் தெரியப் படுத்த ஆசைப்பட்டேன். உன் தந்தை உனக்கு எத்தனையோ சிரமங்களைக் கொடுத்து

விட்டான். நீ இவ்வளவு தூரம் அவற்றை எல்லாம் சகித்ததால் நான் உனக்கு வேண்டிய வரம் அளிக்க விரும்புகிறேன். கேள்!" என்றார்.


பிரகலாதனை சோதனை செய்ய பகவான் முதலில் மோட்சத்தைக் கேட்கத் தான் தூண்டினார். அதாவது சிசுபாலன் போன்ற அரக்கர்கள் பகவானின் உடலில் ஐக்கியம் ஆனது போல், ஸ்ரீ சங்கராச்சாரியாரின் வழியில் செல்லும் எத்தனை எத்தனையோ மாயாவாதிகள் இந்த பிரம்ம சாயுஜ்ய முக்தியைப் பெறுவதற்காகத் தான் ஆயிரக் கணக்கான பிறவிகள் பிறந்து கடுமையாக முயலுகின்றனர். நரசிம்மர் இதை பிரகலாதனுக்கு மிகவும் எளிதாகவே அளித்து விடலாம். ஆனால் பிரகலாதனோ அதை வேண்டாம் என்று உதறினான். ஆனால் பகவான் திரும்பவும், "நீ எப்படியும் என்னிடமிருந்து வரம் பெற்றுத் தான் ஆக வேண்டும்" என்று கூறினார். பிரகலாதன் வேண்டாம் என்று மறுத்தான்.

பிரகலாதன் சிரித்தவாறு கூறினான்: "பகவானே! இந்த பிரம்ம முக்திமட்டுமல்ல, தாங்கள் உறைந்துள்ள பரலோக வைகுந்தம் கூட எனக்கு வேண்டாம். நான் உம்மை எதுவுமே கேட்க மாட்டேன். உமக்கு சேவை செய்து விட்டு, கூலி போல் அதற்கு பலனாக ஏதாவது கேட்கும் வியாபாரியல்ல நான். மேலும் உம்மிடமிருந்து எதையும் பெறுவதற்காக நான் எந்த விதமான சேவைகளையும் செய்யவும் இல்லை. நான் அப்படிப் பட்டவன் அல்ல. நான் உம்மைத் திருப்திப் படுத்துவதற்காக மட்டுமே சேவை செய்கிறேன். நான் செய்யும் மிகச் சிறு சேவைகளில் நீங்கள் திருப்தி கொள்ள வேண்டும்." நான் கேட்கும் ஒன்றே ஒன்று இது தான்.

நரசிம்மர் திரும்பவும் கேட்டார்: "பிரகலாதா! நீ கண்டிப்பாக என்னிடம் ஏதாவது கேட்டே ஆக வேண்டும். இல்லாவிட்டால் நான் இங்கு தோன்றியது வீணாகப் போய் விடும்."

அதற்கு பிரகலாதன், "நீங்கள் எனக்கு வரம் கொடுத்துத் தான் ஆக வேண்டுமென்றால், என்னை உலக சம்பந்தங்களில் ஆசையில்லாதவனாக ஆக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்" என்று கேட்டான்.

மகிழ்ச்சியடைந்த நரசிம்மர் பதிலளித்தார்: "ஓ பிரகலாதா!உனக்கு எந்த விதமான ஆசைகளும் அறவேயில்லை. வேறு ஏதாவது கேள்"



"தாங்கள் ஏதாவது எனக்கு அளிக்க வேண்டுமென்றால் ஒன்றே ஒன்று தான் எனக்கு கேட்கத் தோன்றுகிறது. என் தந்தை உமக்கு ஏராளமான கொடுமைகளைச் செய்துள்ளார். அது மட்டுமின்றி சாதுக்களின் மீதும் எவ்வளவோ கொடுமைகள் செய்துள்ளார். இருந்த போதிலும் என் தந்தையை நீங்கள் மன்னித்து அவருக்கு மோட்சத்தை அளிக்க வேண்டும். "

அதற்கு பகவான், "உன் தந்தை ஏற்கனவே மோட்சத்தை அடைந்து விட்டான். ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை இடைவிடாமல் எப்போதும் ஜெபித்து அவருக்கு சேவை செய்யும் முதல் தரமான சுத்த பக்தனின் இருபத்து ஒரு வாரிசுகளும் தானாகவே மோட்சம் பெறுகின்றனர். இரண்டாந்தரமான சுத்த பக்தனின் பதினான்கு வாரிசுகள் மோட்சத்தைப் பெறுகிறார்கள். பரிசுத்தமான இதயம் கொண்ட குருவின் பாத கமலங்களில் சரணடைந்து பகவானின் நாமங்களை ஜெபித்தும், அவரது லீலைகளைத் தியானித்தும் வரும் மூன்றாம் தரமான பத்தனின் ஏழு வாரிசுகள் மோட்சத்தைப் பெறுகிறார்கள். எனவே நீ வேறு ஏதாவது கேள்" என்று கேட்டார்.

# 17. பிரகலாதன்: "அனைவருக்கும் மோட்சம் கொடுங்கள்!"

பிரகலாதன் அடக்கமாக கூறினான்: "நான் உமக்கு மிகவும் அன்பும் நெருக்கமும் உள்ளவன் என்று எனக்குத் தெரியும். நான் உமக்குச் செய்த சேவைகள் உண்மையிலேயே சந்தோஷத்தைக் கொடுத்திருந்தால், நான் கேட்பது ஒன்றே ஒன்று தான். இந்த உலகத்திலுள்ள அனைத்து ஜீவன்களுக்கும் நீங்கள் மோட்சமளிக்க வேண்டும்! நீங்கள் உங்களது பக்தர்களிடம் மிகவும் பிரியமுள்ளவர். எல்லா ஜீவ ராசிகளும் உம்முடைய அம்சங்களே. எனவே அவை அனைத்தும் உம் சேவகர்கள் தான். ஆனால் அவை அனைவரும் இந்த உலகத்தில் பிறந்து இறந்து சம்சார சாகரத்தில் சிக்கி பாவச் செயல்கள் செய்து நரக வேதனைப் படுகிறார்கள்...

*"ஓ பகவான்! நான் கேட்பது ஒன்றே ஒன்று தான். கஷ்டப்படும் அனைவரின் பாவங்களை என்னை சுமக்க வையுங்கள். அனைவருடைய வேதனைகளையும் கஷ்டங்களையும் என் மேல் போட்டு விடுங்கள். நான் இங்கே எத்தனை ஜென்மங்கள் எடுக்க வேண்டி இருந்தாலும், கோடிக்கணக்கான தடவை இங்கே திரும்பத் திரும்ப பிறந்தும் இறந்தும் கொண்டு, அவர்களுக்காக நிரந்தரமாக நரகம் செல்லுவதற்கும் நான் தயாராக இருக்கிறேன். தயவு செய்து எல்லா ஜீவன்களின் நலனுக்காக இந்த ஒரு வரத்தை மட்டும் நீங்கள் எனக்கு அளிக்க வேண்டும். வேறு எதுவுமே எனக்குத் தேவையில்லை...."*

பிரகலாதன் மீண்டும் தொடர்ந்தான்: "*ஓ, மகிமையும் பரிசுத்தமும் நிறைந்த பகவானே! நான் கோடிக் கணக்கான தடவைகள் அவர்களுக்காகப் பிறவியெடுத்து பாவங்களை அனுபவிக்கத் தயார். ஆனால் ஒரே ஒரு விண்ணப்பம் செய்கிறேன். நீவிர் என்னை எங்கே வைத்தாலும் எனக்கு உமது பக்தர்களின் சேர்க்கையுடன் உம்மை எப்போதும் வழிபட உதவி செய்ய வேண்டும்.*"

பிரகலாத மகாராஜாவின் விண்ணப்பத்தைக் கேட்ட ஸ்ரீநரசிம்ம பகவான் நெகிழ்ந்து போனார். தன் கண்களிலிருந்து கண்ணீர் வர நரசிம்ம தேவர் பதிலளித்தார்: "என் பிரகலாதா! நீ

உண்மையிலேயே என்னை விலைக்கே வாங்கி விட்டாய். இப்போது நான் உனக்குச் சொந்தம்! நான் உனக்கு உலக சுகங்கள் மற்றும் முக்தி போன்ற வரங்களை அளித்து உன்னை ஏமாற்ற முடியாது. அதே சமயம் உன்னை வேதனைப் படவும் விட மாட்டேன். ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுகிறேன்: 'எவரொருவர் இந்த லீலைகளைப் பற்றிக் கேட்கவோ, மற்றவர்களுக்குக் கூறவோ செய்கிறார்களோ அவர்கள் வெகு எளிதாக மோட்சம் பெறுவார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் என்னிடம் சுத்தமான பக்தியையும் பெறுவார்கள்.'"

அது எப்படி நடக்கிறது? அவர்கள் முறைப்படி பரம்பரையில் வந்த குருவிடம் சரணடைந்து, தீட்ஷை பெற்று, அவரது உபதேசங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். பின்னர் அந்த ஜீவாத்மாக்கள் படிப்படியாக மேலேறி மோட்சம் பெறுவார்கள்.

இவ்வாறு பிரகலாதன், எல்லா ஜீவன்களும் பயன் பெறுமாறு ஒரு மகத்தான வரத்தைப் பெற்றான். அவன் தனக்கென்று எந்த விதமான ஆசையுமின்றி, மற்ற ஜீவன்களுக்காக மட்டுமே கேட்டான். ஏனென்றால் தன்னை எப்படியும் பகவான் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை. அவனுக்கு உலக சம்பந்தமான ஆசைகள் அறவே கிடையாது. மேலும் பகவானிடம் ஒன்றாகக் கலந்து விடும் பிரம்ம மோட்சத்தில் விருப்பமேயில்லை.

பகவானால் ஒரே கணத்தில் அண்ட சராசரங்களைப் படைக்கவும் அழிக்கவும் முடியும் என்றும் அவர் அளவு கடந்த சக்தியுள்ளவர் என்றும் அவனுக்குத் தெரியும். மேலும் அவர் அளவில்லாத இனிமையையும், பேரழகையும், ஆச்சரியமான குணங்களையும் கொண்டவர் என்று பிரகலாதனுக்கு நன்றாகவேத் தெரியும். பிரகலாதனுக்கு ஆபத்துக்கள் வந்தபோதெல்லாம் எந்த விதமான பயமும் கொள்ளவில்லை. ஏனென்றால் பகவான் தன்னை எப்படியும் காத்துக் கொள்வார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. "என் பகவான் எப்போதும் என்னைக் காத்துக் கொள்கிறார். அவருக்கு அத்தகைய சக்தி உள்ளது" என்று நன்றாக அறிந்திருந்தான்.

பிரகலாதனுக்கு ஏன் அவ்வளவு தூரம் நம்பிக்கை வந்தது? ஏனென்றால் நரசிம்ம பகவான் பெரும் ஐஸ்வரியத்துடனும் சக்தியுள்ளவராகவும் உள்ளார். அவரது பக்தர்கள் பகவானின் அளவு கடந்த சக்திகளை அறிந்திருப்பதால் அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொள்கிறார்கள்.

# 18. அசைக்க முடியாத நம்பிக்கையே உண்மையான பலம்

பிரகலாதனின் வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ சோதனைகளும் வேதனைகளும் வந்தன. ஆனால் அவன் எதையுமே ஆட்சேபிக்காமல் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டான். தன் தந்தை இவ்வளவு தூரம் கொடுமைப் படுத்தியும் அவன் பதிலுக்கு தந்தையை சபிக்கவோ கடும் சொற்களால் பேசியதோ கிடையாது. மாறாக, எப்போதும் அடக்கமுடனும் மரியாதை கொடுத்தும் பேசினான்.

பிரகலாதன் பகவானிடம் எவ்வாறு பக்தி வைத்திருந்தானோ நாமும் அதுபோல் பக்தி யோகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஸ்ரீகிருஷ்ணர் பரம இறைவன் என்று தெரிந்திருந்ததால் பிரகலாதன் எப்போதும் வழிபட்டும் தியானித்தும் இருந்தான். ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு அவதாரமானதால் பகவான் நரசிம்மரும் அதே போல் சக்தியும் மகிமையும் வாய்ந்தவர். ஹிரண்ய கசிப்பு நரசிம்மரைக் கொல்ல முயன்றான். ஆனால் யாராலும் பகவானைக் கொல்ல முடியாது.

பிரகலாதன் எப்போதும் பகவான் விஷ்ணுவின் மாட்சிமைகளையும் ஐஸ்வர்யத்தையும் நினைத்துக் கொண்டேயிருந்தான். இறைவன் எங்கும் பரந்திருக்கிறார் என்றும் அவர் எங்கேயும் எப்போதும் தோன்றலாமென்றும் பிரகலாதன் அறிந்திருந்தான். ஸ்ரீகிருஷ்ணரின் அளவற்ற சக்திகளை உணர்ந்திருந்ததால் தன்னை எப்படியும் பகவான் காத்துக் கொள்வார் என்று அசைக்க முடியாத நம்பிக்கையிருந்தது. எனவே பிரகலாதன் சிறிதளவு கூட கவலைப் படவேயில்லை. அத்தனை ஆபத்தான சமயங்களிலும் அவன் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். எந்த விதமான பயமுமின்றி ஸ்ரீகிருஷ்ணரை நம்பிக்கையுடன் தொழுது கொண்டான். அவன் பகவான் எப்போதும் தன் இதயத்தில் இருப்பதையும் ஆபத்துக்களில் உடனே வந்து காத்துக் கொள்வதையும் நேரில் கண்டான். பிரகலாதனின் நம்பிக்கை அசைக்க முடியாத அளவு பலமாக இருந்ததால் ஸ்ரீகிருஷ்ணர் எப்போதும் காத்துக் கொண்டார். சாவு அவன் பக்கம் நெருங்கவே முடியவில்லை.

உனது சாவுக்கு நேரம் வந்து விட்டால், சாவு கண்டிப்பாக வந்து தான் தீரும். ஆனால் நேரம் இன்னும் வரவில்லையானால் யாராலும் உன்னைக் கொல்லவும் முடியாது. பிரகலாதன் கொண்டிருந்ததைப் போல் நீயும் அசைக்க முடியாத நம்பிக்கையுடனிருக்க வேண்டும். நான் இந்தச் சரித்திரத்தை எல்லோருடைய நன்மைக்காகக் கூறுகிறேன். சாவோ, கஷ்டங்களோ வரும் போது, நீ அவைகளையெல்லாம் தாண்டி மேலே செல்ல வேண்டும். அதைக் கண்டு பயமோ கவலையோ படாதே. மாறாக எந்த விதமான சிரமங்கள் வந்தாலும் பகவானின் நாமங்களை ஜெபித்தும் தியானித்தும் இரு. ஸ்ரீ கிருஷ்ணரை வழிபடுவதில் ஒருபோதும் தயங்காதே. இவையெல்லாம் பக்த பிரகலாதனின் அறிவுரைகளாகும்.

ஸ்ரீகிருஷ்ணரின் ஐஸ்வரியங்களையும் சக்திகளையும் பற்றி அறிந்திருந்தால் நீ தானாகவே அமைதியும் சாந்தமும் அடைவாய். எல்லாக் காரணங்களுக்கும் மேலான காரணம் ஸ்ரீ கிருஷ்ணர் என்றும் இந்த அண்ட சராசரங்களும் அவரது ஒரு சிறு படைப்பே என்பதையும் நீ உணர்ந்து கொள்வாய். அவர் ஆன்மீக சொரூபத்தில் அளவிலடங்காத ஆன்மீக குணங்களுடன் இருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணரை ஆன்மீக சூரியன் என்று எடுத்துக் கொண்டோமானால் ஜீவாத்மாக்கள் அந்த சூரியக் கதிர்களிலுள்ள சிறு அணுக்கள் போன்றவர்கள்.

ஸ்ரீகிருஷ்ணருக்கு சேவை செய்வது மட்டுமே ஜீவன்களின் சுயமான குணமாகும். அவரது சக்தியின் அம்சமாக சிறு அணுக்களே ஜீவாத்மாக்கள். அப்படியானால் நாமும் அவரைப் போல் சத், சித், ஆனந்த மயமானவர்கள். ஜீவாத்மாக்களின் ஜீவிதத்தின் ஒரே குறிக்கோள் கிருஷ்ண பகவானிடம் பரஸ்பரமாக அன்பைப் பரிமாறிக் கொண்டு ஆனந்தமாக இருப்பது மட்டுமே.

இந்த பரம உண்மையை நாம் உணர்கிறோமோ இல்லையோ, பகவான் நம் மீது அளவில்லாத கருணையை எப்போதும் பொழிந்து கொண்டேயிருக்கிறார். பிரகலாதன் அப்படிப் பட்ட உணர்வைப் பெற்றதால் தான், அவனுடைய வாழ்க்கைச் சரிதம், பக்தி யோகத்தில் மேலே செல்ல விரும்புபவர்களுக்கு மிகவும் துணையாக உள்ளது...

ஹிரண்ய கசிப்புவின் மறைவுக்குப் பின் பிரகலாதன் அரசனானான். தன் தேசம் முழுவதும் பக்தி யோகத்தைப் பரப்பினான். குடி மக்கள் அனைவரையும் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபிக்கவும், சங்கீர்த்தனங்கள், தியானங்கள்

செய்தும் பகவானின் மகிமைகளையும் லீலைகளையும் ஆடியும் பாடியும் வாழ வழி செய்தான். இவ்வாறு அவன் ஆண்ட தேசங்கள் அனைத்தும் வைகுந்தத்தைப் போல் ஆனந்த மயமாகத் தோன்றின.

தவ கர கமல வரே நகம் அத்புத ஷ்ருங்கம்
தலித கிரண்ய கசிப்பு தனு ப்ருங்கம்
கேசவ! திருத்தா நரஹர ரூபா!
ஜெய ஜெக தீஷ ஹரே, ஜெய ஜெக தீஷ ஹரே
(கீத கோவிந்தம் - ஸ்ரீ ஜெய தேவ கோஸ்வாமி)

"ஓ கேசவா! நீவிர் அரை மனித அரை சிங்க வடிவம் எடுத்தீர். ஓ ஜெகதீஷா! நீவிர் எல்லா அண்ட சராசரங்களையும் ஆட்டுவிப்பவர். உமது பக்தர்களின் கஷ்டங்களை நீக்குபவர். உமக்கு மகிமை உண்டாகட்டும். நீவிர் உமது தாமரை மலர் போன்ற கைகளிலுள்ள, தாமரை இதழ்கள் போன்ற நகக் கண்களால் வண்டு போன்ற உடல் கொண்ட ஹிரண்ய கசிப்புவைக் கிழித்தீர். என்னே ஆச்சரியம்! சாதாரணமாக வண்டு தான் தாமரை இதழ்களைக் கிழித்துத் துளாவும். ஆனால் இங்கோ இதழ்கள் வண்டைக் கிழிக்கின்றன!"



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

நிறைந்தது.. வணக்கம்.



பக்த பிரகலாதன் கேட்டான்: "ஓ பகவான்! நான் கேட்பது ஒன்றே ஒன்று தான். கஷ்டப் படும் அனைவரின் பாவங்களை என்னை சுமக்க வையுங்கள். அனைவருடைய வேதனைகளையும் கஷ்டங்களையும் என் மேல் போட்டு விடுங்கள். நான் இங்கே எத்தனை ஜென்மங்கள் எடுக்க வேண்டி இருந்தாலும், கோடிக்கணக்கான தடவை இங்கே திரும்பத் திரும்ப பிறந்தும் இறந்தும் கொண்டு, அவர்களுக்காக நிரந்தரமாக நரகம் செல்லுவதற்கும் நான் தயாராக இருக்கிறேன். தயவு செய்து எல்லா ஜீவன்களின் நலனுக்காக இந்த ஒரு வரத்தை மட்டும் எனக்கு அளிக்க வேண்டும். வேறு எதுவுமே எனக்குத் தேவையில்லை....

...ஆனால் ஒரே ஒரு விண்ணப்பம் செய்கிறேன். நீவிர் என்னை எங்கே வைத்தாலும் எனக்கு உமது பக்தர்களின் சேர்க்கையுடன் உம்மை எப்போதும் வழிபட உதவி செய்ய வேண்டும்."

தன் கண்களிலிருந்து கண்ணீர் வழிய நரசிம்ம தேவர் பதிலளித்தார்: "என் பிரகலாதா! நீ உண்மையில் என்னையே விலைக்கு வாங்கி விட்டாய். இப்போது நான் உனக்குச் சொந்தம்! நான் உனக்கு உலக சுகங்கள் மற்றும் முக்தி போன்ற வரங்களை அளித்து ஏமாற்ற முடியாது. அதே சமயம் உன்னை வேதனைப் படவும் விட மாட்டேன். ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுகிறேன்: 'எவரொருவர் இந்த லீலைகளைப் பற்றிக் கேட்கவோ, மற்றவர்களுக்குக் கூறவோ செய்கிறார்களோ அவர்கள் வெகு எளிதில் மோட்சம் பெறுவார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் என்னிடம் சுத்தமான பக்தியையும் பெறுவார்கள்.'"

"உன் குழந்தைப் பருவத்திலிருந்தே ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபித்தும் அவரை நினைத்தும் தியானித்தும் வர வேண்டும்..."

ஸ்ரீ பக்த பிரகலாதன்.



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

GOKUL BHAJAN GAUDIYA MATHA